# திராவிடநாடு


24—6—56 | வார வெளியீடு | விலை 2 அணா




நகை போட்டுக்கொள்வதென்ருல் நம்முடைய பெண்களுக்கு இருக்கும் ஆசை அதிகமாகும்! இந்த ஆசையின் விளைவாக, இந்திய உபகண்டத்தில் ரூ. 1000 கோடி ரூபாய் பொறுமானமான தங்கம் தேங்கிக் கிடப்பதாக 'ஆந்திர பிரபா' தெலுங்கு ஏட்டின் ஆசிரியர் வி. ஆர். நாராளா தெரிவிக்கிருர். அது மட்டுமன்றி, கோயில்களுக்கென்று இருக்கும் சொத்துக்கள் எல்லாவற்றிலிருந்தும் மேலும் இன்னெரு 1000 கோடி ரூபாய் கிடைக்கக் கூடுமென்றும் அவர் தெரிவிக்கிருர்.

*

மதச் சார்பற்ற அரசாங்கம் என்று பறைசாற்றுகிருரல்லவா நேருபண்டிதர்? அவரிடம், உள்நாட்டு துணை மந்திரியாகயிருக்கும் பி. என். தாதர், இந்த வாரம் திருப்பதிக்கு வந்தபோது சொன்ருராம், "திருப்பதி வெங்கடேஸ்வரனுக்கு வரும் காணிக்கையிலிருந்து திருப்பதியில் பல்கலைக் கழகம் நடத்துவதால், இந்தப் பல்கலைக் கழகத்தில் இந்துமத சம்பந்தமான அபிவிருத்திக்கு வழிவகை செய்ய வேண்டும்" என்பதாக. இதைக் கேட்டுக்கொண்டிருந்த திருப்பதி பல்கலைக் கழக துணைவேந்தர் எஸ். கோவிந்தராசுலு 'அதெப்படி?' என்று கேட்டதோடு, "பக்தர்கள் தமது பக்தியின் அறிகுறியாகக் காணிக்கை செலுத்துகிருர்களே ஒழிய இது போன்ற காரியங்களை 'பகவான்' செய்ய வேண்டுமென்பதற்காக அல்ல; ஆகவே, அமைச்சரின் யோசனைப்படி செய்யவேண்டுவது அவசியமானதல்ல" என்று கண்டித்திருக்கிருர். அமைச்சரின் புத்தி போகிறபோக்கைப் பார்த்தீர்களா?

*

அரசியல் மட்டுமல்ல எந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசினலும் அதில் ஆண்டவனின் அருமையையும் பக்தியின் முக்கியத்துவத்தையும் கலக்கமட்டும் தவறுவதில்லை யல்லவா, நம்முடைய ஆச்சாரியார்? அவருடைய

கூற்று, காமராஜருடைய வாயைக் கூடத் திறந்திருக்கிறது. 'மின்னல்' வேகத்தில் ஊர்சுற்றிய அவர், ஒரு இடத்தில் தெரிவித்தாராம், "பசித்தவனிடம்போய், பக்தி,பக்தியென்று பேசினல் என்ன பயன்?" என்பதாக. காமராஜரின் சுயமரியாதைப் பிரசங்கம் எப்படி, என்கிருர் பரவசமடைபவர்! இப்படிக் கூறும் காமராஜர், கோயில்களில் வீணக்கப்படும் பொருள்களை நல்ல காரியங்களுக்கு எடுத்தாச் செலவழிக்கிருர்? அவரும் போய் அர்ச்சகர்கள் வழங்கும் திருநீறு குங்குமத்தை வாங்கிக்கொண்டு, 'கன்னத்திலடித்த வண்ணம்தானே வந்துகொண்டிருக்கிருர் ஒவ்வொரு கோயில்களிலும்!

*

சில பத்திரிகைகளுக்குப் பண உதவி கொடுத்து இந்திய சர்க்காருக்குக்கெதிராகப் பிரசாரம் செய்யும்படி வெளிநாட்டார் தூண்டுவதாகவும், அப்படிப்பட்ட பத்திரிகைகள் இந்தியாவில் இருப்பதாகவும் அண்மையில் நேரு பண்டிதர் கூறினரல்லவா? அதைக் குறிப்பிட்டு அகில இந்திய பத்திரிகாசிரிய மாநாட்டினர் தீர்மானமொன்று போட்டிருக்கிருர்கள், "நேரு அவர்களே! தாங்கள் குறிப்பிட்டபடி நடைபெறும் பத்திரிகைகள் யாவை? அவைகள் இன்னின்னவை என்பதை வெளிப்படுத்துங்கள்!" என்பதாக.

*

மலேயாவிலிருந்து விரைவில் இங்கு ஒரு கமிட்டி வரப்போகிறதாம். மலேயாவில் டாக்டர்கள் பஞ்சம் அதிகமிருப்பதால், இங்கிருந்து 30 டாக்டர்களை அழைத்துக்கொண்டுசெல்ல இக்கமிட்டி முயலுமாம். செல்ல விரும்புவோரிடம் மூன்ருண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுமாம்.

*

"கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்நாடு காங்கிரசுக்குள் காமராஜருக்கும், ராஜகோபாலாச்சாரியாருக்கும் இடையே நிலவிவரும் 'அரசியல் பகைமை' இப்போது மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டது.

1942-ல் காங்கிரசை விட்டு வெளியேறி ஜனப்ஜின்னுவின் 'பாகிஸ்தான், கோரிக்கைக்கு ஏதோ ஒருவித ஆதரவை ராஜகோபாலாச்சாரி காட்டியது மக்களுக்கு நினைவிருக்கலாம் அதைத் தொடர்ந்துதான் ராஜகோபாலச்சாரிக்கும் காமராஜருக்கும் இடையே 'பகைமை' பிறந்தது. 1946ல். இந்த ராஜகோபாலாச்சாரி, காமராஜ் தகராறு நாட்டையே ஒரு குலுக்குக் குலுக்கியது.

பத்து வருஷங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் கிளர்ந்துள்ள 'தகரா'றும் கிட்டத்திட்ட பழைய நிகழ்ச்சியையே நினைவூட்டுகிறது. அப்போது ஜின்னுவின் 'பாகிஸ்தான'த்தை ஆதரிக்கப் புகுந்த ராஜாஜி இப்போது தாம் நினைப்பதும் அண்ணுத்துரையின் 'திராவிடஸ்தா'னும் ஒன்று என்று கூறியிருக்கிருர். அப்போது ராஜகோபாலாச்சாரியாரின் ஆதரவை ஜின்னு அலட்சியம்செய்துவிட்டார். இப்போது ராஜாஜி தாமாக வந்து தரும் 'திராவிடஸ்தான்' ஆதரவை 'குல்லுகப் பட்டரின் குயுக்தி' என்று அண்ணுத்துரை உதறித்தள்ளுகிருர்.

இப்படி 1946ன் நிகழ்ச்சி 1956ஐ நினைவுபடுத்துகிறது. 1946க்குப் பிறகு 'குன்றம்' தாழ்ந்து 'கோடு' உயர்ந்தது. இப்போது 'பசலுல்லா ரோடு?" என்று 'சமுதாயம்' என்னும் சோஷியலிஸ்டு வார இதழ் எழுதுகிறது.

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14 :: இதழ் 51
24—6—56

# கண்ணீரில் மிதக்கும் கப்பல்

அகில உலகத்தையும் கவனிக்கும் 'ஐயனை' நோக்கிச் சென்றாலாவது நமது அழு குரல் எட்டாதா, வேதனை தீராதா எனும் வேட்கையுடன், நேரு பண்டிதரிடம் சென்ற சென்னை மாநில என். ஜி. ஓக்களின் பிரதிநிதிகள், ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கின்றனர்! அமெரிக்காவும் பிரிட்டனும் 'வருக வருக!' என்று அழைக்கத் துடிக்கும் ஆனந்தக் காட்சியை மனதிலே நினைத்த வண்ணம் கிடந்த நேருவுக்கு நேரம் இல்லையாம், 50,000 சர்க்கார் 'அச்சாணிகளின்' பிரதிநிதிகளைச் சந்திக்க! மறுத்திருக்கிறார். சர்க்காரில் குமாஸ்தாக்களாகவும் இடைநிலை அதிகாரிகளாகவும் இருக்கும் என். ஜி. ஓக்கள், படும் அல்லல்கள் அனந்தம். ஏதோ படித்துவிட்டு, சர்க்காரில் ஒரு உத்தியோகம் பெற்று அதன்மூலம் வரும் ரூபாய் அணுக்களைக் கொண்டு, குடும்பம் எனும் கடலைக் கடந்திடும் கவலையின் உருவங்கள் இவர்கள். சாவுக்கும் வாழ்வுக்குமிடையே தத்தளிக்கும் கூட்டம்! ஆசைகள் ஒரு பக்கமும், அதை நிறைவேற்ற முடியாத இயலாமை இன்னொரு பக்கமும் இடிக்க இவர்கள் நடத்தும் வாழ்க்கை, புயலும் பூகம்பமும் நிறைந்தது! ஆனால், இவர்கள் ஈடுபட்டிருக்கிற பணியோ, பொறுப்பு மிக்கது. அரசுத் தேர் ஆடாது அசையாது ஒழுங்காக—இந்த மந்திரிமார்களின் காலத்திலும்!—ஓடுகிறதென்றால், இவர்கள் தான் காரணம். எனினும், இவர்களது குறைகளைக் கேட்டு நிறைவேற்றுவதில்லை, சர்க்கார். ''ஐயா! அதிகம் சம்பளம் போட்டுக் கொடுங்கள்'' என்றார்கள். ''முடியுமோ!,'' என்று பதிலளிக்கப்பட்டது. அப்படியானால், மத்திய சர்க்காரிலிருக்கும் எங்களைப் போன்ற என். ஜி. ஓக்களுக்கு என்ன அலவன்சு தருகிறார்களோ அதுபோலவாவது தாருங்கள் என்றார்கள். இதனை, நியாயமற்றது என்று யாரும் கூற முடியாது! நேரு பண்டிதரே சென்ற வாரம் ஒரு இடத்தில் பேசியபோது, 'சர்க்கார் குமாஸ்தாக்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் போதாது என்பதை நானும் உணருகிறேன்,' என்று தெரிவித்திருக்கிறார். டில்லி சர்க்கார் குமாஸ்தாவுக்கு அலவன்சும் சம்பளமும் சேர்த்து 100 ரூபாய் கிடைக்கிறதென்றால், சென்னை சர்க்கார் குமாஸ்தாவுக்கு 65 ரூபாய் தான் கிடைக்கிறது! இடையிலிருக்கிற 35 ரூபாய்கள் நம்முடைய அமைச்சர்களுக்கு வெகு சாதாரணமாயிருக்கலாம்—ஒரு வாரம் பிடிக்கிற 'சிகிரெட்'டுக்குக் கூட காணாத தொகையாயிருக்கலாம்!—ஆனால், அந்த 35 ரூபாய்களும் அவர்களுடைய குடும்பத்தின் கொந்தளிப்பை எவ்வளவோ விதத்தில் குறைக்கும். அதனால்தான், அவர்கள் மிகவும் பணிவோடு, காமராஜரை 'தந்தையே! உமது தனயர்களன்றோ யாம்!' என்று அழைத்து, நிதி மந்திரி சுப்ரமணியத்திடம் கெஞ்சிடும் கண்களைக் காட்டி, தத்தமது குறைகளை அனுப்பினார்களாம். சர்க்கார், அவைகளைக் கவனிப்பதற்கில்லையென்று திருப்பி அனுப்பிவிட்டது! அதன் பேரில், அவர்கள் நேரு பண்டிதரை யணுகி சந்தித்து ஏழையின் குரலுக்கு வலிவு தேடுவோம் என்று இங்கிருந்து டில்லிக்குக் கிளம்பினர்—இரயிலுக்கும் ஓட்டலுக்கும் பணம் செலவழிந்ததுதான் மிச்சம்!—நேரு, சந்திக்கவும் மறுத்துவிட்டார்.

இங்கிருந்து செல்லுகிற எந்தக் குறைகளைத்தான் அவர் கவனித்தார் இதுவரையில்? அது அறியாதவர்களல்ல, என். ஜி. ஓக்கள். அமைச்சர்களாகப்பட்டவர்களே, அடிக்கடி 'காவடி' எடுத்தாலும், பலன் கிட்டுவதில்லை. இதனை அறியாதவர்களல்ல. எனினும், ஏன்தான் இந்த டில்லிக்குக் கிளம்பினார்களோ, புரியவில்லை நமக்கு! ஆசைகள் கண்ணை மறைத்துவிடும் என்பர். அவராலாவது குறை தீராதா எனும் ஆசையே, அவர்களைத் துரத்தியது போலும். அந்த மகானுபாவன், இந்த ஏழைகளைச் சந்திக்கவும் மறுத்திருக்கிறார்! இதே சந்திப்பு ஒரு 'எம். எஸ்.' விரும்பியிருந்தால், கிடைத்திருக்கக் கூடும்-இவர்கள் பேட்டிக்குப் போய் காத்துக் கிடந்து திரும்பிய நாளில்—அகில உலகம் சுற்றக் கிளம்பும் அவசரத்திலிருந்த நேரு வேறு யாருக்கும் பேட்டி கொடுக்கவில்லையோ, என்றெண்ணாதீர்கள். மராட்டிய காங்கிரஸ் தலைவர் சந்தித்துப் பேசியிருக்கிறார், தன் சகாக்களுடன்-பொதுக் கூட்டத்துக்கும் போய் முழங்கத் தவறவில்லை; இந்த ஏழைகளைப் பார்க்க மட்டுமே அவருக்கு நேரமில்லாமல் போயிருக்கிறது! டில்லியின் போக்கினை, நேரில் நமது சகோதரத் தோழர்கள், அறிந்திருப்பாரென எண்ணுகிறோம்!

என். ஜி. ஓக்களின் போர், டில்லியோடு அல்ல; அவர்கள் கண் செல்லவேண்டிய இடம், 'சென்னைக் கோட்டை'தான். காங்கிரஸ் அரசுக்கு, என். ஜி. ஓக்கள் என்றாலே, ஒரு அலட்சிய மனோபாவம் இருந்து வருகிறது! இதனை உத்தமர், உதாரர் என்று போற்றப்பட்ட ஓமந்தூரார் முதலமைச்ச

ராகயிருந்த நாட்களிலேயே கண்டோம். அவரைப்போல பொதுஜன ஊழியர் என்று சொல்லப்படும் சாமராஜர் காலத்திலும் காண்கிறோம். ஆனால், இந்த அமைச்சர்கள் அன்று வாங்கிக்கொண்ட சம்பளத்தில் ஏதாவது குறைத்துக் கொண்டிருக்கிறார்களோவெனின், இல்லை! பிரயாணப்படி ஆயிரமாயிரமாக வாங்காமலா இருக்கிறார்கள்? அநாவசியமாக கவர்னர் எனும் பிம்பத்துக்கு ஆண்டுக்கு 10 இலட்சம் அழவும் தவறுவதில்லை! அது இது என்று சொல்லி, அழிந்திடும், விரயத்துக்கும் அளவில்லை. ஆனால், இந்த ஏழைக் குமாஸ்தாக்களுக்குமட்டும் ஊதியத்தை உயர்த்த பணமில்லாமற்போய் விடுகிறது! மாகாண சர்க்காரின் நிலை, இது எனில், மத்ய சர்க்காரோ, கோடிக் கணக்கில் குஷால் செலவுக்கும் குடுமிபிடிச் சண்டைகளுக்கும் அந்தஸ்து ஆடம்பரத்துக்கும் அழிக்கிறது. அதே சமயத்தில், ஒரு அனுதாபச் சொல்கூட, பெறமுடிவதில்லை, அவதியடைபவர்களால்!

காங்கிரசாட்சியின் காலத்தில், அமைச்சர்களாக்கப்பட்டதால் வருவாய்க்கும் வாழ்வுக்கும் வசதிபெற்றோர் பட்டியல் பெரிது; டில்லி மந்திரி படாஸ்கரே கூறுகிறார், 'எனக்கே டில்லியில் எத்தனை மந்திரிகள் என்பது தெரியா'தென்று! இப்படியெல்லாம் பணம், செலவழிகிறது. அப்படிச் செலவழிப்போர், இந்த ஏழைகள் ஏதாவது கேட்டால் மட்டும், குறைகளை நிராகரிக்கிறார்கள். முகத்தைத் திருப்பிக்கொள்கிறார்கள்.

என். ஜி. ஓக்களின் அவல நிலையையும், அரசாங்கத்தின் அலட்சியத்தையும் ஊன்றிக் கவனித்து வருகிற காரணத்தால்தான் திருச்சி தி. மு. க. மாநில மாநாட்டில், "இந்திய அரசியலாரின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் பணிப் புரியும் 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும், சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை முதலியவற்றைப்போலவே; சென்னை அரசியலாரின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும் சம்பளம் பஞ்சப்படி வீட்டு வாடகை முதலிய ஊதியங்களை சென்னை அரசியலார் உடனடியாகக் கொடுக்கவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது," எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மனம் வெதும்பி, என். ஜி. ஓக்கள் இருக்கும் இச்சமயத்தில், இத்தீர்மானத்தை அரசின் பார்வைக்குக் கொண்டுவருகிறோம்.

அழுதழுது ஏழைகள் சிந்தும் கண்ணீர்க் கடல் பெரிது. அக்கடலில் தான் அரசு எனும் கப்பல் இன்று மிதந்துகொண்டிருக்கிறது. கண்ணீர் பெருகினாலோ, கண்ணீர் வடிப்போர், நடவடிக்கை எடுக்கத் துவங்கினாலோ, கப்பல் தத்தளிக்கும்; சாயவும் நேரும்.

இதனை அறிந்து, ஏதாவது செய்ய வேண்டுமென அரசினரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அமைதியான முறையில், சில போராட்ட முறைகளையும் அவதிப்படும் என். ஜி. ஓக்கள் வகுத்திருப்பதாக அறிகிறோம். அந்த முயற்சிகள் குறித்தும், மாநில மாநாட்டுத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "சென்னை 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கள் சங்கம், ஊதியம் உயர எடுத்திருக்கும் முயற்சிகள் வெற்றிதருவதற்கான முழு ஆதரவும் தருவதென இம் மாநாடு தீர்மானிக்கிறது" என்பதாக.

ஆகவே, ஏழையரின் கண்ணீரைத் துடைப்பதே தனது இலட்சியமெனக் கொண்ட தி. மு. க-வின் பக்கபலம் எப்போதும், என். ஜி. ஓக்களுக்கு உண்டு. குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளும் உள்ள உறுதியும், அவைகளைப் பெறப் போராடும் வழிகளில் துவளாத நிலையும் இருக்கவேண்டும் அவர்களுக்கு. அப்போது, நிச்சயம் வழிபிறக்கும் என்பது நமது எண்ணம். ஏனெனில், காங்கிரஸ் அரசில், கிள்ளினால்தான் சொரணை பிறக்கிறதென்பது கண்கூடு. ★

# ஊர்வலம்

['ஞானக்கண்' பேட்டி]

"கடைசியில் உண்மையாகவே விலகி விட்டீர்களே" என்று கேட்டேன், டில்லி நிதிமந்திரி தேசமுக்கை. "ஆமாம், பிறகென்ன? இந்த நேரு தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று சாதிக்கும் போது எனக்குமட்டும் என்னவாம். மராட்டிய மக்கள், பம்பாய் தங்களுக்குத்தான் சொந்தம் என்று உயிரைக் கொடுத்தும் ஒரே குரலில் கோரியும், இவர், 'முடியாது, டில்லியின் பராமரிப்பில்தான் இருக்கும்' என்று ஏன் சொல்ல வேண்டும்? இதைச் சகித்துக் கொண்டு நான் ஏன் பதவியில் இருக்கவேண்டும்..." என்றார், கோபத்துடன். "தங்களைப் பாராட்டுகிறேன். பிறந்த இடத்துக்காகப் பெரிய பதவியை இழக்கத் துணிந்தது, இப்போதுள்ள நிலையில் ஒரு அதிசயம்தான்" என்று கூறிவிட்டு, நேரு பண்டிதரைப் பார்க்கலாமெனக் கிளம்பினேன். வெளிநாட்டுக்குப் பறப்பதற்காக விமானத்திலேறத் தயாராக இருந்தார். என்னைக் கண்டதும், "எனக்கு இப்போது நேரமில்லை. உனக்குப் பேட்டிகொடுக்க முடியாது" என்றார். "நான் என். ஜி. ஓ. அல்ல, முதல்வரே, அதுவுமின்றி, நீங்கள் கொடுக்காவிடில் நானாகவே எடுத்துக்கொள்வேன்" என்றேன். "என்ன, என்ன! நீயாகவே எடுத்துக்கொள்வாயா?" என்று பரக்கப் பரக்கக் கேட்டார். "ஆமாம், நீங்கள் கொடுக்காவிட்டால், எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி?" என்றேன். "நீ என்ன, பேட்டி குறித்துப் பேசுகிறாயா, அல்லது திராவிட நாடு சம்பந்தமாக இப்படிக்கூறுகிறாயா" என்றார். "இரண்டிலும்தான்" என்று தெரிவித்தேன். அவர் அவசரமாக விமானத்துக்குள் நுழையவே டில்லி மந்திரிசபைக் கட்டிடம் பக்கமாகச் சென்றேன். எங்கு போனாலும், ஒரே பரபரப்பும் இரகசியப் பேச்சுமாக இருந்தது. நிதி மந்திரி விலகல்பற்றித்தான். "அவருக்குப் பிறகு யார்...?" என்ற பேச்சுத்தான் அதிகமாக அடிபட்டது. "இதென்ன, நேருவின் பேரரசில் ஒரு நிதியமைச்சர் தானா கிடைக்கமாட்டார்?" என்று கருதினேன். ஆனால் அவர்கள் பேசியதைக் கேட்டதிலிருந்து, ஏன் அந்தப் பதவிக்கு வந்த ஆர். கே. சண்முகமும், சி. எச். பாபா, சான் மத்தாய் போன்றோர், 'உடம்பு வேண்டாம், கையை விட்டால் போதும்' என்று ஓடினார்கள் என்று புரிந்தது. இந்தியாவின் நிதியமைச்சராக இருப்பது சுலபமான வேலையில்லையாம். அதற்குப் பொருளாதாரம் தெரிந்திருந்தால் மட்டும் போதாதாம், நவரச நாடகங்கள் நடிக்கும் பழக்கமும், அதட்டி அடக்கும் திறமையும் தேவைப்படுகிறதாம். நேருவிடம் இருக்கும் ஒவ்

(17-ம் பக்கம் பார்க்க)

# மின்னல் வேக மேதாவிலாசம்!

**தம்பி,**

இப்போதெல்லாம் மிகமிக அருமையாகிவிட்டது — அத்தி பூத்ததுபோல என்று கூடச் சொல்லிவிடலாம் ஒரு காட்சி— நான் சிறுவனாக இருந்தபோது கண்டிருக்கிறேன் அதனை-நீ காண வேண்டுமானால் நமது இயக்கக் கதிரொளி அதிகம் பரவாத 'பட்டி'யாகச் சென்றால் எப்போதேனும் காணலாம்-தெருக்கூத்துக் காட்சி.

என்ன அண்ணா! இது! தெருக்கூத்து இப்போது எங்கும் நடைபெற்றுக்கொண்டுதானே இருக்கிறது—அத்தி பூத்ததுபோல என்கிறாயே—சதா நடக்கிறதே — என்கிறாயா தம்பி! நான், நீ இப்போது காணும் தெருக்கூத்தைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை — இப்போதுதான், ஆச்சாரியாரும் ஆதி சங்கரர் வாரிசும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே காலம் கெட்டுப் போய்விட்டதே — அம்முறையில் நடைபெறும் தெருக்கூத்து நீ காண்பது; நடத்தப்படுவது புராண நாடகமாக இருந்தால்கூட, அதிலே நாலு சீர்திருத்தப்பாடல் பாடினால் மட்டுமே, மக்கள் ஒப்பம் தருகிறார்கள்; நானும் அத்தகைய தெருக்கூத்துக்களைக் காண்கிறேன், ஒவ்வோர் சமயம்.

ஒரு சமயம், தம்பி, நான்நெடுந் தொலைவிலிருந்து ஊர் திரும்பிக்கொண்டிருந்தேன்—திருநெல்வேலிச் சீமையிலிருந்து. நாம் அன்று வாழ்ந்து' இடையில் தாழ்ந்து, இதுபோது விழிப்புற்று எதிர்காலம் ஏற்றமுடையதாக இருந்திடச் செய்வோம் என்ற சூள் உரைத்துக்கொண்டிருக்கும் 'சேதி' பற்றி, மக்களிடம் எடுத்துக்கூறிவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கிறேன்—ஒரு குக்கிராமத்தில் கூத்து நடைபெற்றுக் கொண்டிருந்தது; யாரும் அறியா வண்ணம் ஒருபுறம் இருந்துகொண்டு, கண்டு களித்திடலானேன்; **நல்லதங்காள் நாடகம்!!**

பெற்றெடுத்த செல்வங்கள் பஞ்சத்தால் எலும்புந் தோலுமாகப் போயிருந்த நிலையில், உத்தமி நல்லதங்காள், பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தன் அண்ணனிடம் உதவிக்குப் போகும் உருக்கமான கட்டம்; அந்தக்காட்சியைக் கிராமத்து மக்கள் மெத்த உருக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்; சிலர் கண்களைக்கூடக் கசக்கிக் கொண்டதைக் கண்டேன், தம்பி! நான் குறிப்பிடும் இந்தக்கூத்து நடைபெற்றபோது, டில்லியில் '**முன்ஷி மகாப் பிரபு**' உணவு மந்திரியாக இருந்தார் என்றால், எப்படிப்பட்ட நிலைமை அப்போது நாட்டிலே என்பதை நீயே யூகித்துக் கொள்ளலாம்! நல்லதங்காள் நாடகத்திற்கு இயற்கையாகவே உள்ள உருக்கம், நாட்டின் அப்போதைய நிலைமையினால் பன்மடங்கு அதிகமாகி இருந்தது. அப்போது, என்னைத் தூக்கி வாரிப்போடும் சம்பவம் ஒன்றுநடைபெற்றது.

"உத்தமி! மெத்தக் கஷ்டப்படுகிறாயே! பஞ்சம் அப்படியா பாவி இருக்கிறது உன் தேசத்திலே..." என்று கட்டியக்காரன் கேட்கிறான்.

பாதி பேச்சும் பாதி அழுகையுமாக நல்லதங்காள் பேசுகிறாள்.

"ஐயா! தர்மப் பிரபு! என்னவென்று சொல்லுவேன்? பதினான்குவருஷமாக மழையே இல்லை! அதனாலே ஒரே பஞ்சம். பட்டினி."

"நெல்லே விளையவில்லையோ அம்மணி?" என்று கட்டியக்காரன் கேட்டான்.

"ஆமாம் ஐயா! அரிசிச் சாதத்தை, என் அருமைக் கண்மணிகள் கண்டு மாதம் ஆறு ஆகிறது!" என்றாள் நல்லதங்காள்.

"அம்மணி! அரிசி கிடைக்காவிட்டால் என்ன? பருத்திக் கொட்டை கிடைக்கவில்லையா?" என்று கேட்டானே கட்டியக்காரன்!!

'குபீர்' என்ற சிரிப்பொலி கிளம்பிற்று.

"அப்பா! வெந்த புண்ணிலே, வேல் சொருகலாமா? பஞ்சத்தால் அடிபட்டு, பரதவித்து வருகிறேன், பச்சிளங் குழந்தைகளைப் பார்த்தும், அரிசி



இல்லாவிட்டால் என்ன, பருத்திக் கொட்டை இல்லையா என்று கேட்டு, பரிகாசம் செய்கிறாயே! தர்மமா?" என்று நல்லதங்காள் கேட்கிறாள்.

கன்னத்தில் போட்டுக்கொண்டபடி, கட்டியக்காரன், "அம்மா! ஏழை என்மீது கோபம்கொள்ள வேண்டாம். உத்தமிகளுடைய சாபத்துக்கு என்னை ஆளாக்க வேண்டாம். சத்தியமாக நான் பரிகாசம் செய்யவில்லை... தாயே! எங்கள் தேசத்திலேயும் இப்போது பஞ்சம் — பசி — பட்டினி—அரிசி கிடையாது—அதற்கு இங்கே, உள்ள ஒரு மந்திரி, எங்களை பருத்திக்கொட்டை சாப்பிடச் சொன்னார். அதைத்தான் நான் சொன்னேன். மகராஜி! மாதாவே, பரிகாசமல்ல!" என்று கூறிவிட்டுக் காலில் விழுந்தான். மீண்டும், பெரியதோர் சிரிப்பொலி கிளம்பிற்று.

நல்லதங்காள், கட்டியக்காரனை எழுந்திருக்கச் சொல்லி, "அப்பா! நீ நல்லவனாக இருக்கிறாய்! உன் நாட்டிலே, பருத்திக்கொட்டையை தின்னச் சொல்லும் பாவிகளா மந்திரிகளாக இருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம் தாயே! நாங்களாகத்தான் தவமாய்த் தவமிருந்து அப்படிப்பட்ட தயாமூர்த்திகளை மந்திரிகளாகப் பெற்றோம்" என்றான் கட்டியக்காரன்.

"இது என்ன அநியாயமடா அப்பா! மாடு தின்னும் பருத்திக் கொட்டையை மக்கள் தின்னட்டும் என்று சொல்கிற மகாபாவியா உங்கள் தேசத்து மந்திரி! கடவுளே! ஏனோ இப்படிப்பட்ட அநியாயத்தைக் கண்டும் கண் திறவாமலிருக்கிறாய்?" என்று நல்லதங்காள் கேட்க, கட்டியக்காரன்,

"அம்மா! ஆண்டவன் என்ன செய்வாரம்மா! நாங்களாகத்தான் இந்த நாசகாலர்களைத் தேடிக் கொண்டுவந்து மந்திரிகளாக்கினோம்" என்று கூறிவிட்டு,

**மாட்டுப் பொட்டியில்**
**ஓட்டுப் போட்டோம், மகராஜி,**
**எங்க வயித்திலே**
**மண்ணைப் போட்டாங்க, மகராஜி!**

என்று பாடவே ஆரம்பித்தான்.

மக்கள், 'கரகோஷம்' சொல்லி முடியாது.

தம்பி! நீ, இத்தகைய கூத்துக்களைக் காண்கிறாய், இப்போதெல்லாம். ஜாதி பேதம் கூடாது; அது ஆரியர் வகுத்த சூது! என்று வள்ளியிடம் முருகன் பாடுகிறார், "தேவலோகத்திலேயே, எங்கப்பா நாரதப் பாவி! இருந்துத் தொலையேன். இங்கேதான், கலகமூட்டி, காரியத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்க, உங்க ஆளுங்க, ஊருக்கு ஒரு பத்து உச்சிக்குடுமியாவது இருக்குதே!" என்று நாரதரிடம் நையாண்டி பேசுகிறான் கட்டியக்காரன்! காலம் கெட்டுப் போச்சுது—என்று ஆச்சாரியார் இதனால்தான் பாவம், கை பிசைந்து கொள்கிறார்!!

நான் குறிப்பிடும் தெருக்கூத்து —அசல் புராணம்!! பகுத்தறிவு அதிகமாகப் பரவாத காலத்து, கூத்து.

அப்படிப்பட்ட கூத்துக்களில், பரமாத்மாவைத் தரிசிக்க வேண்டும், 'சாலோக சாமீப சாரூப சாயுச்ய' பதவியைப பெறவேண்டும், காமக் குரோதாதிகளை விட்டொழித்து, கர்மவினைகளை அறுத்தொழித்து பரமபதம் சேரவேண்டும், அதற்கு என்ன வழி? என்ன மார்க்கம்? என்று அறியாமல், திகைத்துத் திண்டாடிக் கிடப்பார் ஒரு தேசத்து 'ராஜா'! திடீரென்று ஒருநாள், யாராவது ஒரு மகரிஷி அவர்முன் தோன்றுவார்; உடனே மன்னர், அடியற்ற நெடும் பனை போல் அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, "மாமுனியே! மாதவரே! இந்தப் பாவியேன் கடைத்தேறும் மார்க்கம்தனை அருளுவீரே!" என்று கெஞ்சுவான். உடனே மனம் இளகி, மகரிஷி, மன்னனை அருகே அழைத்து, "குழந்தாய்! இதோ நான் அருளும் இந்த மஹா மந்திரத்தை, நீ, ஜெபித்துக்கொண்டிருப்பாயானால், உனக்குச் சகலமும் சித்திக்கும்" என்று கூறி, அவன் காதருகே, இரண்டோர் விநாடி உதடசைப்பார்! அவர் உதடசைக்கும்போதே, மன்னன், முகத்தை மலர்ச் செய்துகொண்டு, கண்களை மூடியபடி,'ஆஹாஹாரம்' செய்வான். இரண்டோர் விநாடிகளிலே 'மஹாமந்திர' உபதேசம் முடிந்துவிடும். மன்னன் மற்றோர் முறை மகரிஷியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கிவிட்டு, "தன்யனானேன்! தன்யனானேன்! இது நாள்வரையில், இதனை அறியாது மாயாப் பிரபஞ்சத்தில் உழன்று கிடந்தேன், பாவியேன்! இந்தக் கடையேனுக்கு அருள்பாலித்தீரே கருணாமூர்த்தி! உமது கருணையே கருணை!" என்று போற்றிவிட்டு,

**மாதவ பூஜிதரே! உம்**
**மலரடிதனை நித்தம்**
**பதமுடன் தொழுவேன்,**
**மாதவ பூஜிதரே!**

என்று பாடுவான்! காட்சி முடிவு பெறும்; மக்கள் காணக் கிடைக்காத காட்சி என்று கூறிக் களிப்படைவர். நான் சிறுவனாக இருக்கும்போது, இத்தகைய காட்சிகள் நிரம்பியதுதான் "கூத்து".

நாடாளும் பிரச்சினை பற்றிப் பேசாமல், நாடகமாடும் பிரச்சினை குறித்துக் கூற வந்துவிட்டாயே, என்ன அண்ணா! என்று கேட்டுவிடாதே, தம்பி, உன் அண்ணனே ஒரு கூத்தாடிதான்!! நாடாள்வோரின் மூலம் கிடைக்கும் நன்மைகளைவிடச் சற்று அதிகமாகவே, நாடகமாடிகள் மூலம், மக்களுக்குக் கிடைக்கிறது, என்ற நம்பிக்கை கொண்டவன்.

மேலும், தம்பி, இந்த நாடகம் பற்றிக் குறிப்பிடுவதும் நாடாள்வோர் பற்றிய பிரச்சினையை விளக்கத்தான்!

மதி குறைந்து நிதி மிகுந்திருந்த பழைய மன்னனிடம் மந்திரம் கால், மதி முக்கால் படைத்த மகரிஷி, இரண்டோர் விநாடி உதடசைத்து 'மஹா மந்திரம்' உபதேசிப்பாரே, தெருக் கூத்திலே, அதுபோல, 'நறுக்கென்று' நாலே நிமிஷம் பேசி, மக்கள் மனதிலே மூண்டு கிடக்கும் துக்கத்தைத் துடைத்து, கோபத்தைப் போக்கி, சந்தேகத்தை நீக்கி, தெளிவினைத் தந்து, தேசபக்தியை ஊட்டி, தமது கட்சியின் கீர்த்தியினை நிலைநாட்டி, மாற்றுக் கட்சியினரை ஓட்டி வருகிறார், நமது மதியூக முதலமைச்சர் காமராஜர்! அவருடைய மின்னல்வேக மேதாவிலாசம், எனக்கு, நான் சிறுவனாக இருந்தபோது பார்த்த தெருக்கூத்துக் காட்சியை நினைவுபடுத்தியது. அதைத்தான் உனக்கு நான் சொன்னேன். நான் வேறு என்ன தம்பி சொல்ல முடியும், வேதமும் உபநிஷத்துமா சொல்லமுடியும்!!

ஒரே நாளில் பதினைந்து கூட்டங்களில் பேசியிருக்கிறார், காமராஜர்!

யாராரோ. என்னைப் பேசத் தெரியாதவர், கல்லுப் பிள்ளையார் என்றெல்லாம் கேலிபேசினார்களே, இதோ பாருங்கள் என் திறமையை,

(15-ம் பக்கம் பார்க்க)

திராவிடத்தின்

# கனிப் பொருள்கள்

—பழனி—

## மேக்னசைட்

இக்கனிச் செல்வம் நம் நாட்டில், கிரீஸ், யூபோயியா தீவு போன்ற இடங்களில் கிட்டுவதைப்போன்று மெக்னீசிய உயரிய சத்துக் கொண்ட சர்பென்டைன் கனியோடு கலந்து கிட்டுகிறது. இதுவே உலகில் சிறந்த ரகம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திராவிடத்தில் கிட்டும் மேக்னசைட் "அமார் பெலிஸ்" என்று அழைக்கப்படும் முதல் ரகத்தைச் சார்ந்ததும், உலக மார்க்கெட்டில் மிக அதிகமான விலைபோவதுமாகும்.

இவ்வுலோகம் ரஷ்யாவின் யூரல் மலைத் தொடரிலும், மஞ்சூரியா, ஆஸ்திரியா, வாஷிங்டன், கியூபெக் ஆகிய இடங்களில் கிடைத்தாலும் அவை மிகப் பெரிய நிலப் பரப்பில் மிகச் சிறிய அளவில் புதைந்து கிடப்பதால் அங்கு அவ்வளவு இலாபகரமாக இத்தொழிலை நடத்த இயலுவதில்லை. ஆனால் நம் நாட்டில் சேலத்தில் மட்டும் "சாக்" குன்றுகளில் சற்றேறத்தாழ 10 கோடி டன்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இதில் சுமார் $8\frac{1}{2}$ கோடி டன்கள் மிகப் பெரிய கனரகத் தொழில் அமைக்கத் தேவைப்படும சிறந்த ரகத்தை சேர்ந்ததாகும். உலகில் புதைந்து கிடக்கும் மொத்த மேக்னசைட்டில் 85 சதவிகிதம் சேலத்தில்தான் கிடைக்கின்றது. சுமார் 25 சதவிகிதத்திற்கும் குறைவான அளவு மேக்னசைட்டைப் பெற்றுள்ள ரஷ்யா ஆண்டுக்கு உலகில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மேக்னசைட்டில் 37o/oயும், ஆஸ்திரியா 21o/oயும், மஞ்சூரியா 15o/oயும், அமெரிக்கா 8o/oயும், கிரேக்கம் 7o/oயும், செக்கோஸ்லோவியா 4o/oயும் உற்பத்தி செய்ய 85o/o மேக்னசைட்டைத் தன்னகத்தே கொண்டுள்ள திராவிடம் மொத்த உலக உற்பத்தியில் இரண்டே சதவிகிதம் உற்பத்தி செய்து பின் தங்கிக்கிடக்கின்றது. இக்கனிச் செல்வம் இந்நாட்டில் சரிவர பயன்

> நம்மருந்திரு நாட்டில் கிட்டும் கனிப் பொருள்களைக்கொண்டு எந்தெந்த வகையில் கனரகத்தொழில்கள் அமைக்க முடியும் என்ற வரிசையில் குரோமைட், மைக்கா, அலுமினியம் (பாக்சைட்) போன்ற பொருள்களைப்பற்றி விளக்கினேம், முன்பு. மற்றும் மேக்னசைட், ஈயம், எமெரி, கார்னெட், குவாட்சைட், பாரைட்ஸ் போன்ற கனிச் செல்வங்களைக்கொண்டு எவ்வகை கனரகத் தொழில்கள் செய்ய இயலும் என்பதை இக்கட்டுரை விளக்கும்.

படுத்தப்படுமாயின் திராவிடம் உலகில் செல்வச் சீமையாக மாற முடியும். மற்றும் மேக்னசைட்டின் துணை உலோகமான 'டோலமைட்' ரகம் நாட்டிங்ஹாம்ஷயர், டெர்பிஷயர், யார்க்ஷயர், துர்ஹாம் போனற இடங்களில் கிடைப்பது போன்று திராவிடத்தில் பெல்லாரி, செங்கல்பட்டு கோவை, கர்னூல், மதுரை, மலபார், நெல்லூர், நீலகிரி, தஞ்சை, நெல்லை, திருச்சி, விசாகை மற்றும மைசூர், திரு.கொச்சி மாநிலங்களிலும் பல கோடி டன்கள் கிடைக்கின்றன.

புவியரசு

இவையன்றி மாங்கனீஸ் கனிகளைப் பெற்றிருப்பதில் தன்னிகரற்று உலகில் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளதாகக் கருதப்பட்ட பிரேசில், கோல்டு கோஸ்டு, நாடுகளைவிட 26 மடங்கு அதிகமான அளவு மாங்கனீஸ் கனிகளைப் பெற்று சேலம் உலகச் சிறப்பெய்துகிறது.

இக்கனிப் பொருளை பயன் கொண்டு ஆகாய விமானங்கள் செய்ய தேவைப்படும் ஏரோப்ளேன் எஞ்சின்கள், கிராங்கேஸ்கள், ஆயில்பான்கள், பிஸ்டன்கள், பியரிங்சுகள், பியூக்லெஜ்கள், கேபின், ஸ்டியரிங் பாகங்கள், மைக்ராஸ்கோப்புகள், சினிமாப் பொறிகள், நெசவுப் பொறிகள், பெருமலைத்தொடர்—மேட்டுப்பாங்கான நிலப்பரப்பு ஆகியவற்றைப் பிளக்க உதவும் வெடிகுண்டுகள், மின் உலைகள், சிராமிக் இன்ஸுலேட்டர்கள், ரேடியோ வால்வுகள், நீராவிக் குழாய்கள், பாய்லர்கள், உலோக உருக்குகள். டிரைபேட்டரிகள், இரசாயனப் பொருள்கள், ரயில்வே தண்டவாளங்கள், கிளட்சுகள், வழிமாற்றுக் கருவிகள், போன்ற பொருள்கள் செய்யும் கனரகத் தொழில்களும், இவையன்றி சர்க்கரை சுத்திகரிப்பு, சோப்பு செய்தல், பெயிண்டு வார்னிஷ், பொட்டாசியம் பர்மாங்கனேட், கட்டடவழுக்குக் கற்கள், மெக்னீசியச் சிமிண்டு, மெழுகு, ஆயில்பாலீஷ், ரப்பர் உறபத்தி, போட்டோ கருவி பிளாஷ்லைட் பவுடர் மோட்டார்கார் பாகங்கள் ஆகியவை செய்யும் தொழில்களுமாக திராவிடத்தில் மிகப் பெரிய அளவில் இலாபகரமான முறையில் 15-இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கும் வாய்ப்புள்ளது. மேலும் இந்நாட்டில் தேவைக்கதிகமான அளவு மேக்னசைட் கிடைப்பதால் உலக மார்க்கட்டில் மிக அதிக விலை கொடுத்துவாங்க தயாராயுள்ள ஐக்கிய அமெரிக்காவுக்கு நீண்ட கால ஒப்பந்தத்தின்

மூலம் ஏற்றுமதிசெய்து நிறைந்த இலாபம் பெற வசதியுள்ளது.

### ஈயம்

இக் கனிப்பொருள் உலக நாகரீகம் தோன்றிய காலமுதல் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாய் அமைந்த ஒன்ருகும். உலக அதிசயங்களில் ஒன்ருன பாபிலோனின் "ஊஞ்சல் தோட்டம்" ரோமானியர்களால் ஸ்பெயின்நாட்டு ஈயத்தைக் கொண்டு செய்யப்பட்டது என்று சரித்திரம் சான்று பகருவதிலிருந்து ஆதிகால முதற்கொண்டே மனித சமுதாய முன்னேற்றத்தோடு இயைந்திருக்கின்றது என்பது தெற்றெனத் தெரியும். கி. பி. 15-ம் நூற்ருண்டில் ஐரோப்பிய நாடுகள் ஆண்டிமோனியை ஈயத்தோடு கலந்து "ஆண்டிமோனிய ஈயம்" என்ற உலோகத்தை உற்பத்தி செய்யத் தலைப்பட்டன. இதுவே இன்றைய உலகின் மிகச் சிறந்த முதல் ரகம் ஆகும். இவ்வகையை பெருமளவில் உற்பத்தி செய்யு' நல்வாய்ப்பு திராவிடத்தில் ஏராளம். திராவிடம் பூராவிலுமாக ஈயம், அனந்தபூர், பெல்லாரி, கடப்பை, குண்டூர், கர்னூல் மாவட்டங்களில் பல கோடி டன்களும்; ஆண்டிமோனி, கடப்பை, கர்னூல் மாவட்டங்களிலும் தேவைக்கு அதிகமான அளவிலும் கிடைப்பதால் ஆண்டிமோனிய ஈயக் கலவை செய்யும் மாபெரும் தொலகங்கள் மேற்காணும் மாவட்டங்களில் ஒவ்வொன்று அமைக்க வசதியுள்ளது.

திராவிடத்து ஈயம் மற்றெல்லா நாடுகளில் கிட்டும் ஈயத்தைவிட மிகச் சிறந்த ரகத்தைச் சார்ந்து சிறப்பெய்தக் காரணம் வேறெங்கும் கிட்டாத அளவு 85 சதவிகித வெள்ளிச் சத்தைக் கொண்டிருப்பதே யாகும். அந்த வகையில் இன்று உலக மார்க்கெட்டில் தன்னிகரற்று உற்பத்தியில் தலை நிமிர்ந்து நிற்க்கும் நியூசௌத் வேல்ஸு, இடாகோ போன்ற இடங்களைவிட திராவிடம் எந்த வகையிலும் குறைந்துவிடவில்லை என்பது ஆதாரபூர்வமான ஆராய்ச்சியாளர் முடிவாகும்.

ஐக்கிய அமெரிக்கா, மெக்சிகோ, ஆஸ்திரியா, கனடா, ஜெர்மனி, பர்மா, யூகோ போன்ற நாடுகளில் இக்கனிப் பொருள்கள் மலைப் பாறைகளில் பொதிந்து கிடப்பதால் மிகக் கடின உழைப்பின் பின்பே, அதிசெ் செலவு செய்து எடுக்க முடிகின்றது. ஆனால் நம் நாட்டில் மேட்டு பீடபூமிப் பகுதிகளிலேயே கிட்டுவதால் குறைந்த செலவில் பெருமளவுக்குப் பெற்று தொழில் வளம் செய்ய இயலும்.

இக்கனிச் செல்வத்தைப் பயன்படுத்தி, ஆயுதங்கள், ஸ்டோரேஜ் பேட்டரிகள், கேபிள் 'காப்புகள்' அச்சு எழுத்துக்கள், டொன் பிளேட்டுகள், காஸ்டிங்சு, மணி டெலிபோன்கள், துப்பாக்கித் தோட்டாக்கள், 'ஸ்ராப்னல்' உருண்டைகள், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் கன ஈயத் தகடுகள், குழாய்கள், லித்தோ போன்கள், கப்பல் இணைப்புகள், 'பீளம்பு-பாப்ஸு'கள் 'சீன்கர்கள்', டைவிங்சூட்டுகள், பெயிண்டு அச்சு மை, வார்ணீஷ், கண்ணாடித் தொழிலுக்குத்தேவையான சாதனங்கள், காலிகோ அச்சுகள், இவைமட்டுமின்றி கிருமிநாசினி மருந்துகள், மின்சார வயரிங்குகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பெரும் தொழிற்சாலைகளை இந்நாட்டில் பதிமூன்று இடங்களில் அமைக்க வசதி உள்ளது.

### எமெரி (உப்பு)

கோரன்டம் தாதுக்களும் மேக்னைசைட்டும் கலந்த கலவைப் பொடியே எமெரி உப்பாகும். இது இரும்பு, மரம் மற்றும் பொருள்களைத் தேய்த்து பளபளப்பாக்கும் எமெரித்தாள், எமெரித் துணி. எமெரியுரைக் சக்கரங்கள் முதலிய பொருள்கள் செய்யப் யயன்படும் கனிப்பொருளாகும்.

எமெரிக்கனிகள் கண்ணாடித் தகடுகள் போன்றும், சிறு சிறு திட்டுகளாகவும், பளிங்குசுண்ணக் கற்களோடும் கலந்து இந்நாட்டில் கிடைக்கின்றது,

எமெரி உப்பு கிரீஸ் கடலோரப் பகுதி, ஆசியாமைனர், மத்திய இரஷ்யாபோன்ற இடங்களில்தான் உலகில் அதிகமான அளவில் கிடைத்து வந்தது. ஆனால் பெல்லாரியில் கிட்டும் எமெரி உப்பு கிரீசில் கிடைப்பதைப் போன்று வெட்பத் தடுப்பு சக்தி மிக்கதாக உள்ளது. ஆகவே அதைப் பயன்படுத்தி உரைச் சக்கரங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்க இயலும், மேலும் எமரி உப்பு உலக நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கும் முக்கியமான கனிப்பொருளாக உள்ளமையால் பெல்லாரியில் ஏராளமான அளவில் கிடைக்கும் எமெரி உப்பை எடுத்து சுத்திகரிக்கும் பெரும் தொழிற்சாலைகள் அமைத்து சுத்திகரிக்கப்பட்ட கோரன்டம் எமெரி உப்பை வெளிநாடுகளுக்கு அனுப்பி வெற்றிகரமாக தொழில் நடத்த முடியும்.

### கார்னெட்

இக் கனிப்பொருள் உலகின் பல பாகங்களில் குறிப்பாக அமெரிக்காவில் மலைகளிலும், மலைப் பாறைத் தகடுகளிலும் படிந்துள்ள ஓர் கனிப்பொருளாகும். ஆனால் இது நம்நாட்டில் திருநெல்வேலி கடற்கரை மணலோடு ஏராளமான அளவு கலந்து கிடக்கின்றது. அமெரிக்க நாட்டு மலைப் பகுதிகளில் இத்தாதுப் பொருள் 70 சதவிகிதம் கற்பாறைகளோடு கலந்து கிடக்கின்றது. ஆனால் திருநெல்வேலியில் இவ்வுலோகம் கிட்டத்தட்ட 85 சதவிகிதம் மணலோடு கலந்து கிடக்கின்றது.

### நாணயம்!

புதிய நாணயச் சீர்திருத்தத்தில் 'இந்தியா' என்ற ஆங்கிலச் சொல் தவிர, மற்றவை யெல்லாம் பொது மக்களால் வேண்டப்படாத இந்திச் சொற்களாகவே இருக்கின்றன. இப்போதுள்ள சில நாணயங்களிலாவது, இந்தியாவின் முக்கியமான மொழிகளில் நாணயத்தின் மதிப்பு குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னிந்திய மக்களின்மேல் இந்தி சுமத்தப்பட மாட்டாது என்று தலைமை அமைச்சர் முதல், தொண்டர் வரையில் கூறிய உறுதி மொழிகளெல்லாம் புதிய நாணயங்களைப் பொறுத்த வரையிலாவது மெய்ப்பிக்கப்படவில்லையே? இந்தி மொழி ஆதிக்க வெறியர்களின் வெற்றிச் சின்னங்களாக அல்லவோ அவை உருவாக்கப்பட்டுள்ளன? நாணயம் என்பது இரு பொருள்கொண்ட சொல்லாயிற்றே? காசு என்பது ஒரு பொருள்; சொல்லைக் காப்பாற்றும் பண்பென்பது மற்றொரு பொருள். அப்பண்பு, புதிய சீர்திருத்தத்தில் காணப்படவில்லை. நாணயமற்ற முறையில் அரசினர் இயங்கி வருகிருர்கள். இது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

"தமிழ் நாடு"

மலைப் பாறைகளினின்றும் கார்னெட்டைப் பிரித்தெடுப்பதைக் காட்டிலும் மணலிலிருந்து இக் கனிப்பொருளை பிரித்தெடுப்பது முதல்தரமானதாக அமையும், என்பதோடுகூட சிரமமும் செலவும் குறைவாகும். மேலும் அமெரிக்காவில் இப்பொருள் ஆண்டுக்கு 3000 டன்களே எடுக்கும் வாய்ப்புள்ளது, ஆனால் திராவிட நாட்டில் நெல்லையில்மட்டும் 50,000 டன்களுக்குமேல் கிடைக்க வழி உள்ளது.

இவ்வுலோகத்தைக் கொண்டு 'அப்ரேசிவ்' துணி, 'அப்ரேசிவ்' காகிதம் போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில் செய்ய இயலும். மற்றும் தென்னாட்டில் கார்னெட் வடாற்காடு, திருச்சி, தஞ்சை, கிருஷ்ணா, மலபார், நெல்லூர், நீலகிரி, ராமனாதபுரம், சேலம், விசாகை ஆகிய மாவட்டங்களில் பல்லாயிரக் கணக்கான டன்கள் கிடைக்கின்றது. அவற்றைப் பயன்படுத்தி பெரும் தொழில்கள் அமைக்கலாம்.

## குவாட்ஸைட் (படிகக் கற்கள்)

இக்கனிப் பொருள் கிடைக்கும் இடங்கள் உலகில் மிகச்சிலவேயாகும். அவற்றில் குறிப்பாக பிரேசிலும், மடகாஸ்கரும், உகண்டாவுமே குறிப்பிடத் தகுந்த வகையில் இக்கனிவை உற்பத்திசெய்து வந்தன. ஆனால் இன்று அம்மேலை நாடுகளோடு போட்டியிடுமளவுக்கு திராவிடம் தன்னகத்தே பல இலட்சக் கணக்கான டன்கள் குவாட்சைட்டைப் பெற்று சிறப்பெய்துகிறது. திராவிடத்தில் குறிப்பாக சென்னை, ஆந்திரப் பகுதிகளில் மட்டும் ராமனாதபுரம், தஞ்சை, திருச்சி, கடப்பை, விசாகை, கி. கோதாவரி, அனந்தபூர், ஆகிய மாவட்டங்களில் இந்திய உபகண்டத்தில் வேறு எந்த பகுதியிலும் கிட்டாத அளவுக்கு ஏராளமான அளவில், கிடைக்கின்றது. மேற்கத்திய நாடுகள் இக் கனிப்பொருள் 100-அடி ஆழத்திலிருந்து மிகக்கஷ்டப்பட்டு எடுத்து உபயோகிக்க வேண்டியுள்ளது. ஆனால் நம் நாட்டில் சுமார் 15 அடி ஆழத்திலேயே தேவைக்கதிகமான அளவு கிடைப்பதால் இப்பொருள் கிடக்கும் இடங்களில் மாபெரும் சுத்திகரிப்பு தொழிற்சாலைகள் அமைத்து சுத்திகரிக்கப்பட்ட படிகக்கற்க (குவாட்சைட்)ளை மாற்று நாடுகளுக்கு அனுப்பி வாணிபம் நடத்தி வருவாய் தேட முடியும். மேலும் இப்பொருளைக் கொண்டு 'மார்டர்' சிமண்டு, கண்ணாடி, 'சிலிகா' கற்கள், 'அப்ரேசிவ்கள்' பெயிண்டு வகைகள், சோப்பு, மணற் காகிதம், 'பில்லர்'கள், கட்டட—தரையில் பாவும் வழக்குக் கற்கள், 'தொலை நோக்கி' கண்ணாடிகள், 'இரசாயனச் சாதனங்கள், 'எலாஸ்டிக்' பொருள்கள், ரேடியோக்கள், டெலிபோன்கள், ஒலிபெருக்கிக் கருவிகள், ரேடியோ 'ஆஸிலேட்டர்கள்' போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யும் மாபெரும் தொழிற்சாலைகள் திராவிடம் முழுமையிலுமாக 22-இடங்களில் அமைக்க வாய்ப்பும் வசதியும் உள்ளது.

## பாரைட்ஸ் (பாதியம்)

இக்கனிப்பொருள் துத்தம், லைம்ஸ்டோன் போன்ற கனிப் பொருள்கள் கிட்டும் இடங்களிலும், பாரைட்ஸ் சத்துக்கொண்ட மலைக் கற்களூடே ஓடிவரும் ஆறுகளில் படியும் வண்டல் ஆகியவற்றிலும் கிடைக்கும் உலோகமாகும். இக் கனிப்பொருள் இதுவரை நார்த்தம்பர்லாந்து, ஜெர்மனி, டெர்பிஷயர், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில்தான் உலகிலேயே அதிகமான அளவு கிடைப்பதாக இதுவரைக் கணக்கிடப்பட்டுவந்தது. ஆனால் இப் பொருள் நம்நாட்டில் மட்டும் ஆறு மாவட்டங்களில் ஏராளமாக கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது அனந்தப்பூர், கடப்பை, குண்டூர், கர்னூல், நெல்லூர், சேலம், மாவட்டங்களில் 'நார்த்தம்பர்லாந்து' வகையைவிட தரத்தில் மிகஉயர்வான பாரைட்ஸ் கிடைப்பதாக பூகர்ப ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இவ்வுலோகத்தை அலுமினியம், மேக்னிசம், ஈயம் ஆகிய உலோகங்களோடு கலந்து ரேடியோ வால்வுகள், எனமல் பெயிண்டுகள், 'கோட்டிங்' பேப்பர்கள், ஆகியவை செய்யப் பயன்படும் பில்டர்கள், கரித்தார் (Coal-Tax-Oil)எண்ணை தொலைவழி காட்டி, உருக்கு இரும்புப் பொருள்களை உறுதிப்படுத்தும் பாரியம் கார்போனெட், 'எக்ஸ்ரே' எடுக்குமுன் உடலில் உள்ள உள் உறுப்புகள் 'எக்ஸ்ரே' படத்தில் தெளிவாக விழ முன்னதாக அருந்தும் மருந்துக் கலவை (Mixture) எலிவிஷ முறிவு மருந்துகள் ஆகியவை தயாரிக்கும் பெரும் தொழில்களை திராவிடம் முழுவதும் 13 இடங்களில் அமைக்க இயலும்.

★


"பகுத்தறிவு"

—()—

"பகுத்தறிவு" மாத இதழ் வார இதழாக, ஜூலை முதல் வாரம் தொடங்கி வெள்ளி தோறும் சேலத்திலிருந்தும் வெளிவரும் என்பதை அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் "பகுத்தறிவு"
சேலம்.



நீங்கள் படித்துவிட்டீர்களா?

புத்தம் புதிய நூல்

சி. என். ஏ. தீட்டிய

நாட்டின் நாயகர்கள்

விலை அணா எட்டு

வியாபாரிகளுக்கு 25o/o கழிவு. தனிப்பிரதி வேண்டுவோர் போதிய தபால் தலைகள் அனுப்புக.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

## எகிப்து

எகிப்து நாட்டினர் கடந்த 18ந் தேதியை மிகவும் ஆனந்தத்தோடு கொண்டாடியிருக்கிறார்கள். அன்றுதான், 74 ஆண்டுகளாக சூயஸ்கால்வாயை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல் படையின் கடைசிப் பிரிவு, வெளியேறிற்று. அலுவலகத்தில் பிரிட்டிஷ் கொடி இறங்கி, எகிப்துக் கொடி ஏறியது! இந்தப் பிரிவு வெளியேறியதோடு, பிரிட்டிஷாரின் கடைசிப்பிடிப்பும் அற்றுவிட்டதென்று கருதலாம். இரு சர்க்காரும், மனமொத்து நடந்துகொண்டதால், வெளியேறுவ்து மிகவும் சுமுகமாக நடந்திருக்கிறது. இந்த முக்கியத்துவத்தைக் குறித்து விழாக் கொண்டாடிய நேரத்தில் எகிப்தில் ஒரு சட்டமும் செய்யப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவரைக் கூடக் கோர்ட்டுகள் விசாரணை செய்யலாம் என்பதுதான் அது. இப்படி, எந்தக் குடியரசு நாடுக்ளிலும் சட்டம் கிடையாது! எனினும், யாராவது ஒரு தலைவர் மீண்டும் முடியாட்சிக்கு முயற்சிக்காமலிருக்க கூடாது பாருங்கள், அதற்காகவே இத் தற்காப்பாம் அங்கு.

## சைப்ரஸ்

கிரீசுடன் இணைந்திருப்போமே ஒழிய பிரிட்டிஷாரின் பிடியிலிரோம் எனச் சொல்லி சைப்ரஸ் தீவில் மாபெரும் கிளர்ச்சி நடைபெற்று வருவதும் மதகுரு மகாரியாசைக் கொண்டுபோய் தீவில் வைத்திருப்பதும்தான் எல்லோருக்கும் தெரியுமே! அந்தக் கிளர்ச்சிக்காரர்களை விரட்டிப் பிடிப்பதற்காக பிரிட்டிஷ் படைகள் தென் மேற்கு சைப்ரசிலுள்ள காடுகளுக்குள் நுழைந்து வேட்டையாடினவாம். அப்போது, எப்படியோ தீப்பிடித்துக் கொள்ளவே, மரங்கள் யாவும் பற்றிக்கொண்டு எரியத் துவங்கி, அதன் விளைவாக 19 வீரர்கள் மாண்டனரென்றும் 18 பேருக்கு மேல் பலமான காயமென்றும் தெரிகிறது. தீப்பிடிக்க, கிளர்ச்சிக்காரர்கள் காரணமாயிருக்கக்கூடும் எனவும் கருதப்படுகிறது.

## ஹங்கேரி

"ஐயா! நான், என் குடும்பத்தைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஆதலால் இந்தப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள அனுமதி கொடுங்கள்," என்று கோரி ஹங்கேரியின் தலைவராக விளங்கிய பால்சாபோ என்பார், விலகிக் கொண்டுவிடவே, புதியவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அன்டால் அப்ரோ எனும் இவர், கம்யூனிஸ்டுக் கட்சி முக்கியஸ்தரும் துணைப் பிரதமர்களில் ஒருவரும் ஆவார். ஹங்கேரியில், மக்கள் முன்னணி என்கிற பெயரால், கம்யூனிஸ்டு அரசாங்கம் நடைபெற்று வருகிறது.

## இத்தாலி

மேற்கு ஐரோப்பாவிலேயே மிகப் பெரியது என்று கருதப்படும் இத்தாலி கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான டோக்ளியாட்டி இந்த வாரம் விடுத்துள்ள அறிக்கை குறிப்பிடக்கூடியதாகும். ஸ்டாலினை அலட்சியப்படுத்தும் ரஷ்யத் தலைவர்களின் போக்கைச் சாடுகிறார், அவர். "நம்மைவிட, ரஷ்யாவிலிருப்பவர்களுக்கு ஸ்டாலினைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கக் கூடும். அவர்கள் கூறுவது நிசமாகக்கூட யிருக்கக்கூடும். இப்படி, தமது குறைகளை அவர்கள் விமர்சனம் செய்வதுகூட, நல்லதற்காக இருக்கலாம். ஆனால், இப்படி செய்ததன் மூலம் அவர்களது கௌரவம் பாதிக்கப்பட்டிருப்பது உண்மை!", என்று குறிப்பிடும் அவர், "ஏன், இவர்கள் ஸ்டாலின் உயிருடன் இருந்தபோதே இந்த விபரங்களை எடுத்துச் சொல்லியிருக்கக் கூடாது? அப்போது, எல்லா நன்மையும் ஸ்டாலினால் தான் என்று துதிபாடிவிட்டு இப்போது எல்லாக் கெடுதல்களுக்கும் ஸ்டாலின்தான் காரணம் என்று ஏன் கூறவேண்டும்?", என்று கேட்டிருக்கிறார்.

## ஆலந்து

காதல் பிரச்னை, நாட்டைக் கலங்கடித்து விடுமோ என்கிற அச்சம் டச்சுக்காரர்களுக்கு எழும்பியுள்ளதாம்! சர்க்காரின் நிதி நிலைமையைச் சரிக்கட்டுவதற்காக, ஆலந்து ராணி ஜூலியானாவும் அவளுடைய கணவனும் நான்கு குழந்தைகளும் அடங்கிய படத்தை விற்பனை செய்து பணம் திரட்டலாமென மந்திரிசபை முடிவுகட்டி இருக்கிறது. ஆனால், நாட்டிலோ, ராணி ஜூலியானா பதவியைத் துறக்கப் போகிறாள் மந்திரவாதி ஒருவன் மீது கொண்ட காதலால் என்கிற செய்தி பரவிக்கிடக்கிறது! இந்தச் செய்திக்கு இதுவரை எவ்வித மறுப்பும் வெளிவராததால் உண்மைதானோ எனும் ஐயம் ஏற்பட்டு, இதுபற்றியே நாடு முழுமையும் பேச்சாக உள்ளதாம்!!

# ஆள்பவராக வந்ததும்!

"அக்கிரமம்தானே நமக்கு வாழ்வளிக்க மறுக்கும் இந்த அரசாங்கத்தின் போக்கு"

"ஆமடா அப்பா! தொல்லைகளுக் காட்பட்ட மக்களாய், எல்லைப் புறத்தில் வாழ்கிறோம் நாம். இவர்கள், இந்தியாவிலிருந்து பிரிய என்னென்ன வாதங்களைக் கிளப்பினார்களோ, அத்தனையும் நமக்குப் பொருந்தும்"

"ஆயினும், ஏன் மறுக்கிறார்கள்? ஆதிக்கப் போதை தானே, அண்ணா, அதற்குக் காரணம்!"

"அதிலும் சந்தேகமா? நாம் என்ன பாகிஸ்தானத்திலிருந்து நமது பிரதேசத்தை வெட்டியெடுத்துக்கொண்டா போகப்போகிறோம். பட்டாணிஸ்தான் கேட்கிறோம். சிறு பொறுப்புகளை மத்திய சர்க்கார் வைத்துக்கொள்ளட்டும். முக்கிய அதிகாரங்கள் எமது அரசிடம் இருக்கட்டும் என்கிறோம்"

"இப்படிச் சொல்வதற்காக, நமக்குக் கிடைத்திருக்கும் பரிசு, சிறைவாசம்! ஊரே, விழாகொண்டாடுகிறது, வெள்ளையன் போனமைக்காக. கூடிக் குலவி மகிழ்ந்த காங்கிரஸ் கட்சி கொண்டாட்டம் நடத்துகிறது இந்தியாவில்...... நமக்கோ, கஞ்சிக் கலயம்! துரோகி என்னும் பட்டம்!"

"இதெல்லாம், வீரருக்கு வெண்ணிலாச்சோறுதானேடா, தம்பி! இவைகள் அதிகமாக அதிகமாக நமது இலட்சிய புரிப் பயணம் நெருங்கிவருகிறது எனப்பொருள், அரசியல் வரலாற்றுப்படி"

"அந்த நம்பிக்கைதானண்ணா' என் உள்ளத்துக்கு உரமளித்து வருகிறது"

*

இப்படியும், இதற்குமேலும் பேசிக்கிடந்திருக்கக்கூடும் அந்த அண்ணனும் தம்பியும்! அவர்களிருந்த இடமோ, சிறைக்கூடம். பட்டாணியர்களுக்காகத் தனி நாடு கேட்கிறான், பல காலம் காந்தியுடன் கூடிக்கிடந்தவன், அவனுக்குப் பெயரே எல்லைக் காந்தியாம், அப்படிப்பட்டவன் பாகிஸ்தானைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன்தான் பட்டாணிஸ்தான் கேட்கிறான், அதற்குப் பக்துனிஸ்தான் என்றும் பெயர் சொல்கிறான்,

இதுபோல, ஏச்சும் பேச்சும் வீசப்பட்டது வெளியில். பேசுவோர், மக்களின் இதய நாதத்தைத் தட்டிவிட்டு, பாகிஸ்தானம் பெற்றுத்தந்த தலைவர்கள். அதனால், "பாவி! இந்த கான் அப்துல் கபார்கானை பார்த்தாயா? புதியதோர் தாயகத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது, லீக்! இருந்தாலும், காங்கிரசிலிருந்தோம் என்கிற பழைய அபிமானத்தால் இன்னும் நமக்கு எதிராகவே சதி செய்கிறான், தனிநாடு கேட்கிறான்......" என்று மக்களும் பேசினார்கள். அவரோ, "ஐயா! காங்கிரசில் நானிருந்தது சரி. ஆனால், அதற்காக நான் பாகிஸ்தான் கூடாது என்று கூறவில்லை அமைதியுள்ள பிரஜையாக வாழ்வேன். ஆனால், பாகிஸ்தானுக்குள் எமக்கு பட்டாணிஸ்தான் கொடுங்கள். பட்டாணியர்கள், அவதிப்பட்ட மக்கள்! அவர்களுக்கு ஒரு தனி மாகாணமும் அரசும் அளியுங்கள். உங்களோடு, என்றும் ஒத்து வாழ்கிறோம்" என்று சொன்னார். ஏறுமா இந்தக் குரல்? இங்கு எப்படி, சுதந்திரோதயத்தை வரவேற்ற பிறகும் நம்மை, துரோகிகள், வெள்ளையரின் எடுபிடிகள், என்று காங்கிரஸ்காரர்கள் ஏசுகின்றனரோ அதைப்போல ஏச்சும் பேச்சும் பெற்றார் கான் அப்துல் கபார் கான். சாந்த முகம், வீர உருவம், கொள்கையில் கொண்டுள்ள உறுதியினை உணர்த்தும் உடலமைப்பு—அந்த முதியவர், பட்டாணியர்களுக்கு உரிமை கேட்டதற்காக மூடப்பட்டார் சிறையில்! ஓராண்டு, ஈராண்டல்ல, ஆறுண்டுக் காலம். அவரோடு கூடிக் குலவிய அபுல்கலாம் ஆசாதும், நேரு பண்டிதரும் டில்லி மாளிகையிலே விருந்துபசாரங்களையும் வீரா! விற்பன்னா! எனும் புது மகுடங்களையும் பெற்று பூரித்து உலவிய வேளையிலே, அந்த மனிதர் பூட்டப்பட்டுக்கிடந்தார், பாகிஸ்தானத்துச் சிறைக்குள்—துரோகி! ஆப்த்தானவன்! தனியமைப்புக் கோருகிறான்! என்று குற்றங்கள் சாட்டப்பட்டு. அவர் மட்டுமல்ல, அவருடைய அண்ணன் டாக்டர் கான் சாகிப் என்னும் பெரியாரும், தம்பியைப் போலவே சதா சர்வகாலம் காங்கிரசில் தொண்டாற்றியவர், தனி நாடு வேண்டுமெனக் கேட்ட தம்பிக்கு உறுதுணையாயிருந்தவர்! அவரையும் பாகிஸ்தான் சர்க்கார், கபார்கானுடன் சேர்த்துச் சிறையிலே பூட்டி வைத்தது, அண்ணனும் தம்பியும், அப்போது, சிறைக் கோட்டத்துக்குள்ளே, என்னென்ன பேசியிருப்பார்கள், எப்படியெப்படி பெருமூச்சு விட்டிருப்பார்கள். ஆண்டுகள் ஏழெட்டு ஓடிவிட்டனவே ஒழிய, அந்த நிகழ்ச்சிகள், இருவருடைய மனதை விட்டும் மறைந்திடவா முடியும்?

இரண்டாண்டுகளுக்கு முன்பு இருவரையும், சிறையிலிருந்து விடுதலை செய்தார்கள் பாகிஸ்தான் சர்க்கார். அதுமுதல், இருவரும், வெளியிலே உலவி வந்தனர்.

இப்போது மீண்டும் சிறைக் கதவு திறக்கப்பட்டு, எல்லைக் காந்தி, கொண்டுபோய் மூடப்பட்டிருக்கிறார், இந்த வாரம்! அப்படிச் செய்ததும் யார் தெரியுமா? அந்த இடம்தான் அதிசயத்திலும் அதிசயமாயிருக்கிறது! தம்பியின் போராட்டத்தை வாழ்த்தியும் உறுதுணையாக யிருந்தும் வந்தாரே அந்த அண்ணன்தான், தம்பியைக் கொண்டுபோய் தள்ளுங்கள் சிறையில் என்று உத்திரவிட்டிருக்கிறார்.

பாகிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் விளைவாக, டாக்டர் கான் சாகிப், மேற்குப் பாகிஸ்தானத்துக்கு முதலமைச்சரானார்! தம்பி, எப்போதும்போலவே நாடு காடு மேடு சிற்றூர் பேரூர் என்றே சுற்றி வந்தார் — தன்னுடையகோரிக்கையான பட்டாணிஸ்தான் குறித்து முழக்கமிட்டு வந்தார்!! இப்போது, அண்ணன், தம்பியை, சிறையில் பூட்டியிருக்கிறார்.

*

"தம்பி! நீ, தகாத காரியம் செய்கிறாய்."

"என்ன, அப்படி?"

"தனி நாடு கோருகிருய்..."

"அது நமது இதயநாத மாயிற்றே!"

"...என்ருலும், இப்போது நீ அதுபற்றிப் பேசக்கூடாது."

"ஏன்?"

"நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்று கருதுகிறேன்..."

"அதெப்படி?"

"விளக்கவேண்டுமானுல், நீதி மன்றத்தில் கூறுவார், எனது அரசாங்க வக்கீல்."

"போக்கு புரியவில்லையே, எனக்கு! என் அண்ணனு இப்படிப் பேசுவது?"

"உன் அண்ணனல்ல, முதல் அமைச்சர்!"

*

இதுபோல, அவர்கள் பேசவில்லை! எனினும், இதயம், எண்ணமலா இருந்திருக்கும்!!

அண்ணனுகயிருந்தவர், ஆள்பவராக வந்ததும், தம்பியைக் கொண்டுபோய் தள்ளியிருக்கிருர் சிறைக்குள்.

தம்பி தனி அமைப்புக் கேட்கிருர்! அண்ணன், தனி அமைப்பைக் கண்டித்து மாகாணங்களையெல்லாம் ஒன்ருக்கி அமைக்கப்பட்ட மேற்கு மண்டலத்தை ஆள்கிருர்!

ஆள்பவர், அரசுரிமை கேட்பவரைக் கைது செய்து, சிறைக் கோட்டம் அனுப்பியுள்ளார்.

அரசியல் எவ்வளவு ஆபத்தான போதை யென்பதைப் பாருங்கள்! சிறையில் தள்ளச் சொன்னது மட்டுமல்ல, தனி கோர்ட்டு ஒன்றும் நிறுவி, தம்பியைக் குற்றவாளிக் கூண்டுக்குள்ளே நிறுத்தி விசாரிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிருர்!!

டாக்டர் கான்சாகிப், இப்படி நடவடிக்கையெடுத்தது எதற்காகவாம் தெரியுமா? அதைக் கேட்கிற போதுதான், அதிகாரபோதையின் அளவும் வலிவும் தென்படுகிறது நமக்கு.

டாக்டர் கான்சாகிப், மந்திரிசபை அமைத்தது முதல், முஸ்லீம் லீக்கினர் அவரையும் தம்பியையும் சேர்த்துக் குற்றம் சாட்டி வருகின்றனராம்!

"அண்ணன் ஆள்பவர்! தம்பி சண்டப்பிரசண்டம் செய்பவர்!! இந்த வேடிக்கையைப் பாருங்க எய்யா. சிந்து, பஞ்சாப், எல்லைப்புறம், பலுசிஸ்தானம் இவைகளை ஒன்ருக்கிய பிரதேசம் இருக்க வேண்டும் என்பவர் கான் சாகிப்! எமது எல்லைக்கு ஒரு அமைப்பு வேண்டும்—அது பட்டாணியரின் நாடு என்று கேட்பவர் கபார்கான்! இந்த நிலைமையில், இந்தப் பட்டாணியர்கள், பஞ்சாபிகளாகிய நமது நலன்களைப் பலியிடுகிருர்கள்," என்பதாகப் பேசுகிருர்களாம்.

"அப்படியெல்லாம் இல்லை! இதோ பாருங்கள், பட்டாணியருக்காகப் 'பக்டுனிஸ்தான்' கேட்கும் என் தம்பியின்மீதே நடவடிக்கை எடுத்துள்ளேன். இந்த லீகினர் கூறுவதை நம்பாதீர்கள்!" என்று, நிரூபிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுத்துள்ளாராம் அவர்.

ஆட்சிக்கு, வேட்டுவைக்க முயலுகின்றனர், லீகர்கள்!

ஆட்சி பீடத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தம்பியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிருர், அண்ணன்! ஒருபோது, தம்பியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, கஷ்டநஷ்டங்களை அனுபவித்த அண்ணன்!!

ஆட்சி போதை, எத்தகையவர்களையும் பலிகொண்டுவிடுகிறது, என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு இது. கொள்கை முழக்கி, கூடி வாழ்வோம் எனச் சொல்லி, "கூறுங்கள் நிபந்தனைகளை; காட்டுகிற இடத்தில் கையெழுத்திடுகிறோம்" என்று உறுதியளித்து, ஒப்பந்தப் பத்திரங்களளித்தோர், இந்தப் போதைக்கு ஆட்பட்டு, என்ன கதியானுர்கள் என்பதை இங்கு கூட நாம் கண்டோம்!

நாளையதினம், கபார்கானும் கான்சாகிபும் சேர்ந்து வாழும் சந்தர்ப்பம் கூட நேரக்கூடும். ஒருவருக்கு ஏதாவது விபத்தென்ருல் தானுடாவிட்டாலும் தன்னுடைய சதை ஆடக்கூடிய சகோதரர்கள்தான் இருவரும். ஆயினும், வாழ்நாள் பூராவும் சிறைப்பறவையாகக் காலங்கழித்தானே தம்பி, என்று கூட எண்ணச் செய்யவில்லை, ஆட்சிப் போதை.

தம்பி, சிறையில்! தனயன் கையிலோ சிறைச்சாவி!

அந்தப் போதைக்கு மட்டும் இரையாகாமலிருந்தால், உலகில் எவ்வளவு இரத்தக் களரிகள் ஏற்படாமற் போயிருக்கும். மாற்றுக் கட்சியினர், வேற்றுக் கொள்கையினர்—எனினும், நம்மோடு வாழ்பவர்கள் எனும் எண்ணம் மட்டும் இருந்தால், சிறைக் கதவுகள் திறக்கவும் மூடவுமான சந்தர்ப்பமா ஏற்படும்? அடிதடி! ஆர்ப்பரிப்பு! விடுவேனு உன்னை எனும் வீராவேசம்! வழக்கு! தண்டனை!-அப்பப்ப; ஆட்சி அதிகாரத்தை இழக்காமற் செய்துகொள்ள, என்னென்ன செய்கிருர்கள், ஆளவருவோர். அந்தக் காட்சியை, நாம் உத்தமா! உதாரா! ஓர்குலமன்ரே! என்று எவ்வளவு சொல்லினும், செய்யாமலா விடுகிருர் காமராஜர். தெரிவிக்கிறதே, பிப்ரவரி 20ந் தேதியின் விளைவாக கடலூர் போன்ற இடங்களில் வீசப்பட்ட வழக்குகள்.

சிறைக்கோட்டத்துக்கு மட்டும் வாயிருந்தால், மீண்டும் கொண்டு வந்து பூட்டப்பட்ட கபார்கானையும், பூட்ட உத்திரவிட்ட கான்சாகிபையும் கண்டு, வாய்விட்டன்ரே நகைக்கும்! அதிகார ஆசை, கொள்கையினை மட்டுமா, அண்ணன் தம்பி, உற்ருர் உறவினர், ஓரினம் ஒரு நாட்டவர் எனும் பாசத்தையுமன்ரே கொன்று போட்டுவிடுகிறது!!

✶

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

ஒரு உரையாடல்

# உப்பில்லாத சோறு!

"அக்கிரமம்! அக்கிரமம்!! இருந்தாலும் இப்படிப்பட்ட அக்கிரமம் செய்யக்கூடாது", என்று கூவிக்கொண்டே வந்தான், என் நண்பன்.

திடுக்கிட்ட நான், "என்னப்பா, அக்கிரமம்? யார் செய்தது?", என்றேன்.

"யார் அக்ரமம் செய்யப்போகிறார்கள் இந்த நாட்டில்? எல்லாம் நீங்கள் தான்!"

"நீ சொல்வது புரியவில்லையே...... அப்படி என்ன அக்கிரமம்? கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லேன்."

"மிகப் பெரிய அக்கிரமப்பா! மிகப் பெரிய அக்கிரமம்!!"

"வளர்த்தாதே, சொல்",என்றேன், நான் ஆத்திரமும் சலிப்பும் அடைந்தவனாய்.

"ஒழுக்கம் வேண்டுமென்று சொல்லுகிறீர்களாமே? இப்படிச் சொல்லலாமா? இதை விடப் பெரிய அக்கிரமம் ஏதாயினும் உண்டா..."

"இதென்னப்பா, உத்தமர்கள், மகா முனிவர்கள், ஆச்சாரியார்கள், ஜீயர்கள் அனைவரும் உலகில் ஒழுக்கம் குறைந்துவிட்டது; அதர்மம் பெருகி விட்டது; அவனவனும் பேராசையும் கெடுமதியும் கொண்டலைகிறான். உலகம் உருப்பட ஒழுக்கம் பெருக வேண்டும், என்று சொல்லுகிறார்கள். இதைப்போய் அக்கிரமம் என்று அலறுகிறாயே. ஒரு வேளை, நாங்கள் சொன்னதால், அது அக்கிரமம் ஆகி விட்டது என்று கூறுகிறாயோ?" என்றேன்.

"நான் கூறவில்லையப்பா! பாலசுப்ரமண்ய அய்யர் சொல்லுகிறார். மயிலாப்பூர் பி. எஸ். ஐஸ்கூலில் சென்ற வாரம், சேக்கிழார் விழா நடத்தினார்களாம். அதில், அவர் பேசியபோது சொன்னாராம், "இக்காலத்தில் ஒழுக்கம் மட்டுமேபோதும்; பக்தி எதற்கு என்கிறார்கள். பக்தியில்லாத ஒழுக்கம் உப்பில்லாத சோறு போல!" என்பதாக.

"உப்பில்லாத சோறு என்றா சொன்னாராம்..."

"ஆமாம்! தினமணி, மிகவும் விசேஷ சிரத்தையுடன் வெளியிட்டிருக்கிறது..."

"ஒழுக்கம் என்றால் என்ன?"

"ஒழுக்கம் என்றால்...?"

"ஏன் திகைக்கிறாய்? பிறர் சொத்து விழையாமை! பிறரைக் கெடுக்க ஆசைப்படாமை! கோபம் நீக்குதல். எளியார்க்கு இரங்குதல், காமம், களவு, கட்குடி முதலியவைகளில் ஈடுபடாமலிருத்தல். பிறன் மனைவியை விரும்பாமை... "சுருக்கமாகச் சொன்னால், நல்லது செய்வதும், தீய வழிகளில் ஈடுபடாமலிருத்தலும் ஒழுக்கம் என்று கூறலாம்......"

"ஆமாம்!"

"பக்தி, என்றால் என்ன?"

"பக்தி என்றால், ஆண்டவனை திரிகரணசுத்தியாய், மனதில் தியானிப்பது......"

"தவறு! நீ, நூல்களில் படிப்பதை நான் கேட்கவில்லை. பக்தர்கள் என்போர், இக்காலத்தில் பக்தி என்று சொல்வது எதனை?"

"ஆலயம் நுழைவது, அர்ச்சனை செய்வது, குருதட்சணை செலுத்துவது, குளத்தில் குளிப்பது, கோவிந்தா கோவிந்தா வென்று உருள்வது...மேலும்..."

"போதும், இதுபோதும்! இந்தப் பக்தியில்லாமல் ஒழுக்கமட்டுமிருந்தால், அந்த வாழ்க்கை உப்பில்லாத சோறு என்கிறார், அவர்"

"ஆமாம்"

"சரி! ஒரு உதாரணம் கூறுகிறேன் கேள். நீ ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முடிவுசெய்துவிட்டாய்—திருமண நாளும் வந்துவிட்டது. இந்தச் சமயத்தில் அந்தப் பெண் வீட்டுக்கு ஒருவர் வருகிறார். அப்பெண்ணின் தலைமயிரைப்பார்க்கிறார்..."

"எதற்காக அவர் பார்க்கவேண்டும்?"

"பார்க்கக் கூடாதுதான்......பார்க்கிறார் என்று வைத்துக்கொள். தலைமயிர், அழகாகயிருப்பது கண்டு, மோகம் கொள்கிறார்......"

"எதன்மீது?"

"அதன்மீதுதான்!"

"ஆசைப்பட்டு...?"

"அந்தப் பெண்ணின் தகப்பனாரைப்பார்த்து, ஐயா, தங்கள் மகளின் கேசம் என் மனதைக் கவர்ந்துவிட்டது, வெட்டிக்கொடுங்கள் எனக்கு என்கிறார். அத் தந்தை என்ன செய்வார்?"

"போடா போக்கத்தவனே! மகளுக்கு, மணம் நடக்கவிருக்கிறது. இப்போது தலையை மொட்டையடிக்கச் சொல்ல, என்னடா உனக்குத் தைரியம்?—என்று கேட்பார், சாதுவாயிருந்தால். முரடனாகயிருந்தால், அடி தடி ரகளைதான்..."

"சரி! வந்த அந்த ஆள், அந்த விஷயத்தைவிட்டு, இப்படிக் கேட்கிறார் என்று வைத்துக்கொள்..."

"எப்படி?"

"உன் மனைவியை விரும்பி வந்தேன் என்று கேட்கிறார், அப்போது நீ என்ன செய்வாய்?"

"இதென்னப்பா! ஆபாசமான கேள்வி. எவனாவது அப்படிக் கேட்பானா? கேட்டால்தான், அவனைச் சும்மா விடுவார்களா? மானம், மரியாதையில்லையா?"

"அப்படிக் கேட்கிறவன், சாதாரண மனிதனல்ல! பெரிய சந்யாசி.

"யாராயிருந்தாலென்ன? வெட்டு ஒன்று துண்டு இரண்டுதான்!"

"பெரிய பக்திமான் என்று பெயர் எடுத்தவர்"

"என்ன தோழா! இதையெல்லாம் ஒருவன் கேட்பானா, அதிலும் பக்திமான் கேட்பானா, ஒழுக்கத்தை ஓம்ப வேண்டிய உத்தமன் இப்படி ஒழுக்கங் கெட்ட முறையிலா பேசுவான்? என்ன இருந்தாலும் நீ இப்படிப் பட்ட உதாரணங்களா, சொல்வது!"

"இப்படி நடந்திருக்கிறானப்பா, ஒருவன்!"

"யாரெந்தப் பித்தன்? பேய்க்குணம் படைத்த கயவன் யார்? ஒழுக்கமற்ற உன்மத்தன் யார் நண்பனே, யார்?"

"பக்தி தேவை என்று பாலசுப்ரமண்யஅய்யர் தெரிவித்தார் என்றாயே, அப்படிப்பட்ட பக்திக்கெல்லாம் அரசனான பரமசிவன்தான். மானக்கஞ்சார நாயனர், என்பவர்தான் மகளின் முடியை அறுத்துக் கொடுத்தவர்! இயற்பகை நாயனர் என்பவர்தான்

மனைவியை மகேசன் பின்னால் அனுப்பியவர்''

''செச்செச்சே!''

''காதுகளை மூடிக்கொள்ளாதே! பக்தியின் பேரால் ஒழுக்கத்தையே துறந்த கதைகள்தான் நமது புராணங்கள்! சேக்கிழார் விழா கொண்டாடியதாகச் சொன்னாயே, அவருடைய பெரிய புராணத்தைப் படித்துப் பார், சிந்தை நோகும். ஒழுக்கம் கெடக்கூடிய கதைகளாகத்தானிருக்கும் சகலமும். ஏன், உனக்குத் தெரியாதா நம்முடைய கடவுள்களின் கதைகள்...''

''ஆமாம்! பெண்ணைத் திருடியவன், துகிலுரிந்தவன், ரிஷி பத்னிகளை வேட்டையாடியவன், மாற்றான் மனைவியை அபகரித்தவன்...''

''பக்தர்களுடைய கதைகளும் தெரியுமல்லவா?''

''அறிவேன்! அறிவேன்!! திருடியவன், கொலை செய்தவன், நம்பியவர்களைத் துரோகம் செய்தவன், நயவஞ்சகன்...''

''இப்படிப்பட்ட ஒழுக்கம் கெட்டவர்களையெல்லாம் 'பக்திப் போர்வை' காப்பாற்றியிருக்கிறது...... அப்படிப்பட்ட போர்வை யில்லாவிட்டால், வாழ்க்கை உப்பில்லாத சோறு என்கிறார் ஐயர்!''

''ஆமாம்! துணிவோடு சொல்கிறார்...''

''ஏன், சொல்லமாட்டார்? இப்போதும், கொலைகாரன், கொள்ளையடிப்பவன், ஏழையின் வயிற்றிலடிப்பவன், இல்லாதாரைக் கொடுமைப் படுத்துபவன், இதுபோன்ற பஞ்சமா பாதகங்களைச் செய்பவன்தானே நெற்றியிலே நீறும் உதட்டிலே பகவான் நாமமுமாக 'பக்திப் பழம்' போல காட்சி தருகிறான். அவனைவிட, இதெல்லாம் செய்யாமல், ஒழுகத்தோடு வாழ்பவன் எந்த விதத்தில் கெட்டவன்?''

''நீ கேட்பது போலத்தானப்பா, அந்த வினோபாவும் கேட்டிருக்கிறார்!''

''வினோபாவை போற்றும் பால சுப்ரமண்ய அய்யர்களே, இப்படியும் பேசுகிறார்களே!''

''ஆமாம், உப்பில்லாத பண்டங்கள்!!''

★

# இலங்கை மொழிப் போர்

[இலங்கையிலிருந்து வரும் செய்திகள், இதயத்தைப் பிளக்கக்கூடியதாயுள்ளன. தமிழர்களுக்கேற்பட்டுள்ள கதியைப் பற்றிக்கேட்க நாதிகூட இல்லை, நமக்கு! நேரு பண்டிதர், ஒரு வார்த்தைகூட செப்பவில்லை இன்னும், துப்பாக்கி முழக்கமும், பிணப்பட்டியலும், கலவர விபரமும் நம்மை மிகவும் கலங்கச் செய்கின்றன. இதற்கோர் முடிவேற்படாதா? எனக் கேட்கிறோம். அங்குள்ள நிலவரம் பற்றி, 'சுதந்திரன்' 'ஈழகேசரி' எனும் ஏடுகள் தந்த எண்ணங்கள், இவை.]

சிங்களர் அனுபவிக்கும் மொழிச் சுதந்திரத்துக்குத் தமிழ்பேசும் மக்கள் சகல விதத்திலும் அருகதை பூண்டவர்கள் என்பதை மறுத்துச் சிங்களத்தை அவர்கள் மீது திணிக்குமளவுக்கு அதிகாரத் திமிர் அவர்களின் கண்களை மூடி மறைத்து விட்டது. 'சிங்களர்' என்ற ஓர் இனம் இலங்கையில் தோன்றுமுன்னரே இந்நாட்டில் வாழ்ந்துவந்த தமிழினத்துக்கு அவர்களின் மொழியுரிமையை மறுக்க எந்த அரசினருக்குமே உரிமை கிடையாதெனத் துணிந்து கூறுவோம். ''மிகமிகப் புராதன ஆதி மொழியாகிய தமிழ், வேறு சில பழம் பெரும் மொழிகளைப்போல உலக வழக்கிழந்து, சிதைந்து ஒடுங்கி, மறைந்தொழிந்து போய்விடாமல், தன்னுடைய சீரிளமைத் திறத்தைப் பிறமொழியினர் வியக்கும் வண்ணம், குன்றாத பொலிவுடன், பல நாடுகளிற் பேசும் மொழியாகவும் இலக்கியச் சிறப்பு மொழியாகவும் இன்றும் விளங்குகின்றது. வளமார் தமிழ் மொழிக்கு இலங்கை அரசாங்கம் செய்துள்ள துரோகத்தைக் கண்டு தமிழ் பேசும் மக்கள் பொறுத்திருக்கமாட்டார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு மொழிப் போராட்டத்தை நடத்தியே தீருவார்கள். அநீதி செய்யும் எந்த ஆட்சியும் நெடுங்காலம் நிலைபெற்றதில்லை. அதே கதிதான் இலங்கையில் இன்று நிலவுங்கொடிய ஆட்சிக்கும் ஏற்படும். 'கட்டுண்டோம்: பொறுத்திருப்போம்; காலம் மாறும்' நாம் எப்பேரிடிக்கும் அஞ்சோம்.

—'ஈழகேசரி'

*

சோல்பரி அரசமைப்புத் திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து சிங்கள அரசாங்கம் தமிழ்ப் பேசும் இனத்திற்கு எதிராக சட்டத்திற்குமேல் சட்டம் நிறைவேற்றுவதும், அந்த சட்டங்களை அரசியல் சூட்சுமம் அறிந்த தமிழ்த் தலைவர்கள் எதிர்க்கும்போதெல்லாம் அவ்வப்போதுள்ள பிரதமர்கள் ஒரே பல்லவியைப் பாடி ''சட்டத்தைக் கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்? சட்டம் எப்படியிருந்தால் என்ன? அதை எப்படி அமுல் நடத்தப் போகிறோம் என்பதைப் பாருங்கள். நான் இருக்கும்வரை நியாயமாகவும் நீதியாகவும் நடந்துகொள்வேன். என்னை நம்பி, எங்களோடு ஒத்துழையுங்கள்'' என்று கேட்பதும் தமிழ்ப் பேசும் மக்கள் கடந்த காலங்களில் கண்டு அனுபவித்த பழைய காட்சிகள்தாம்.

இதே பல்லவிதான் பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டபோதும், மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஜீவாதார உரிமைகள் பறிக்கப்பட்ட போதும் மற்றும் பல தமிழ் இன விரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவ்வப்போது அதிகாரத்திலிருந்த பிரதமர்களால் நீட்டி முழக்கிப் பாடப்பட்டு வந்தது.

இதே பல்லவியைத்தான் தனிச் சிங்கள மசோதா விவாதத்தின் போதும் இப்போதுள்ள புதிய பிரதமர் திரு. பண்டாரநாயகாவும், அரசாங்க கட்சியைச் சேர்ந்த இதர சில்லறைகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பாடித் தீர்த்திருக்கிறார்கள். ''எங்களை நம்புங்கள்; ஒத்துழையுங்கள்'' என்பதுதான் அவர்களுடைய எடுப்பும் தொடுப்புமாக இருந்தது.

தமிழ்ப் பேசும் மக்கள் இதுகால வரை நம்பித்தான் கெட்டழிந்து இன்றைய இக்கட்டான, பரிதாபகரமான நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

—சுதந்திரன்.

★

கந்தலைத் தவிர வேறு எதையும் பார்த்தறியாத ஒரு குழந்தைக்குப் பட்டாடை வாங்கிக் கொடுத்துப் பாருங்கள். அந்தக் குழந்தையின் முகத்தில் காணும் பூரிப்புதான் ஆண்டவனின் அருள்!''

தினமணி மே 29

*6-ம் பக்கத் தொடர்ச்சி*

*மின்னல் வேகத்தில் மேதா விலாசத்தைக் காட்டுகிறேன் என்று கூறிவிட்டுக் கிளம்பினவர்—ஒரே நாளில் 15-கூட்டங்களிலே பேசித் தீர்த்துவிட்டார்! மக்களும் கேட்டுத் தொலைத்தார்கள்!*

*ஒரே நாளில் 15 கூட்டங்கள்! தம்பி! நான் ஐந்து நாட்கள் சுற்றிவிட்டு வந்து கணக்குப் பார்க்கிறேன்—திகைக்கிறேன்,*

**15.** ராமநாதபுரம்
பரமக்குடி
**16.** வில்லிபுத்தூர்
தளவாய்புரம்
**17.** சாத்தூர்
விருதுநகர்
**18** அருப்புக்கோட்டை
**19.** சின்னமனூர்

*இவ்வளவுதான் முடிந்தது!! ஐந்து நாட்களில் எட்டே கூட்டங்கள்! செச்சே! எனக்கே, வெட்கமாக இருக்கிறது! ஒரே நாளில் 15 கூட்டங்களிலே பேசிய அந்த 'மேதை' எங்கே, ஐந்து நாட்கள் சுற்றியும் எட்டு கூட்டங்களுக்கு மேல் பேச முடியாமலுள்ள உன் அண்ணன் எங்கே! மின்னல் வேக மேதா விலாசமாக அல்லவா இருக்கிறது, அவருடைய அருஞ் செயல்!!*

*ஆனால் தம்பி, அவரால் ஒரே நாளில் 15 கூட்டங்களென்ன — அதிகாரிகள் தம் ஆயாசத்தைத் தாங்கிக்கொள்ளக் கூடுமானால் இன்னும் ஒரு பத்து கூட்டங்களிலேகூடப் பேசுவார்! மகரிஷி 'மஹாமந்திரத்தை' உபதேசிப்பது போலத்தானே! நம்மைப்போல, அடிவயிறு வலிக்க வலிக்க, காரணங்களை விளக்கவேண்டிய தொல்லை அவருக்கு ஏது? வரலாறு பேச வேண்டுமா! பூகோளம் காட்டப்போகிறாரா! இலக்கியம் குறித்துஎடுத்தியம்பப்போகிறாரா? வாதிடப் போகிறார்? பைத்யக்காரர் நாம், இவைகளைச் செய்கிறோம்; அவர், நறுக்கென்று நாலே வார்த்தை பேசுகிறார்—'மஹாமந்திரம்' உச்சரிப்பதுபோல—மக்கள் உடனே தெளிவுபெற்று, என்னே இவர்தம் திறமை! ஏன் இத்தனை காலமாக இதனை ஒளியவைத்துக்கொண்டிருந்தார் என்று கொண்டாடுவதாக, அவர் கருதுகிறார்!*

*கொப்பம்பட்டியிலும் சரி, கொடுமுடியிலும் சரி, பொள்ளாச்சியிலும் சரி, போடியிலும் சரி, அவர் கூறுவது என்ன?*

**எதிர்க் கட்சிகளை நம்பாதே!**

**திராவிட நாடு, என்பது பைத்யக்காரத்தனம்.**

**வடநாடு தென்னாடு என்றெல்லாம் பேசக்கூடாது.**

**வடக்கு ஒன்றும் கெடுதி செய்யவில்லை.**

**காங்கிரஸ் நிறைய நன்மை செய்கிறது.**

**ஏழை பணக்காரன் என்றெல்லாம் பேதம் பேசக்கூடாது.**

**பணக்காரன் இலாபம் சம்பாதிக்கிறான்; சம்பாதிப்பதால் என்ன? வரி போட்டு, வாரி எடுத்துக்கொள்ளலாம்.**

*இவ்வளவுதான்!*

*பதினைந்து என்ன, மூன்று பதினைந்துகூடப் பேசலாமே!*

*இவைகளை விளக்க, இவைகளுக்குக் காரணம் காட்ட, ஆதாரம் கூற, மறுப்போரின் வாதங்களுக்குப் பதில்கூற, அவசியம் இருந்தால்தானே, நேரம் பிடிக்கும்—திறமையும் வேறு தேவைப்படும்!*

**கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்,**

**அண்ணன் எழுதிய கடிதம் எங்கே?**
*என்று பேசுவதிலே தொல்லை என்ன இருக்கிறது! ஒரு நாளில் பதினைந்து ஒய்யாரமாகப் பேசிவிட்டு வரலாமே! பேசுகிறார்!*

*காரணம் கேட்போர், ஆதாரம் தேடுவோர், வரலாற்றினைக் காட்டு என்போர், என் 'கூட்டத்திலே' இருந்தால்தானே, நான் அவைபற்றி எல்லாம் பேச வேண்டிய அவசியம் ஏற்படும்—நான் பேசும் கூட்டங்கள் எப்படிப்பட்டவை, அதிலே கலந்துகொள்வோர், யாரார் தெரியுமல்லவா? என்றுகூட அவர் கேட்டுவிடக்கூடும். ஏனெனில், அவருக்கு வேகமாக வளருகிறது—கோபம்!*

*கலெக்டரும் அவர் தயவினைத் தேடும் கனவானும், போலீஸ் அதிகாரியும் அவர் தயவின்றி அறுவடைக்குச் செல்ல முடியாத மிராசுதாரரும், கிராமத் திருப்பணியாளர்களும் அவர்களுடைய உதவியைத் தேடித் திரியும் "காண்ட்ராக்டர்களும்"—கூடி நிற்கும் அந்த மாமன்றத்துக்கு இந்த மின்னல் வேக மேதாவிலாசம் போதும்—என்பதை தம்பி! நீ ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். இவர்களுக்கெல்லாம், எந்தப் பிரச்சினையிலே சந்தேகம் எழப்போகிறது — முதலமைச்சரிடம் விளக்கம் கேட்க! உண்மையைச் சொல்வதானால், தம்பி இவர்களுக்குப் 'பிரச்சினை' ஏது? அப்படியே ஏதாவது தனிப்பட்ட விஷயமான பிரச்சினை இருந்தாலும், பொதுக் கூட்டத்திலே எடுத்துக் கூறத்தக்கதாகவா இருக்க முடியும்! எனவேதான் முதலமைச்சர் மின்னல் வேகத்தில் தம் மேதாவிலாசத்தைக் காட்டிவிட்டு, கோட்டைக்கு வந்து கொலு வீற்றிருக்கிறார்!*

**வறுமை கொட்டுகிறது**

**பொறு! பொறு!**

**வேலையில்லாத் திண்டாட்டம் வாட்டுகிறது?**

**இரு! இரு!**

**அகவிலையால் கஷ்டப்படுகிறோம்!**

**ஆமாம்! ஆமாம்! விலை குறையும், சீக்கிரத்தில்.**

**பஞ்ச நிலைமை இன்னும் நீடிக்கிறது!**

**ஐந்தாண்டுத் திட்டம் பஞ்சத்தை ஓட்டிவிடும்.**

*இவ்வளவு போதாதா! இதையாவது சொல்கிறாரே!*

* * *

*'இந்தியா பல்வேறுநாடுகளைக் கொண்ட ஒரு உபகண்டமாகத் திகழ்கிறது. நடுநிலைமையுடன் இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்தோர் அனைவரும் இந்த முடிவுக்கே வந்திருக்கின்றனர். சீதோஷ்ண நிலை, மண் வளம், பொருளுற்பத்தி, மக்களின் பழக்க வழக்கங்கள், பேசும் மொழிகள், முதலியன யாவும் இந்தியாவிலுள்ள பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. இந்தியாவிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தினர் வாழ்கின்றனர். அந்த இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி மொழி, நாகரிகம், சரித்திரம் ஆகியவைகள் இருந்து வருகின்றன.' இங்ஙனம் பல நாட்டுப் பண்புகள் அமைந்திருப்பதனாலேயே இந்தியாவை ஒரு உபகண்டமென்று சொல்ல வேண்டி இருக்கிறது.*

மேலும், இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் மேற்சொன்ன நாடுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனி அரசாங்கங்கள் நடந்துவந்திருப்பதாகவும் தெரிகிறது.

*

ஆங்கிலேயர்களால் இந்தியாவில் ஒரே அரசாங்கத்தை நிலைக்கச் செய்வதும், இந்தியா ஒரேநாடு என்ற எண்ணத்தைப் பரப்புவதும் ஓரளவு முடிந்தது என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் யாருடைய நன்மைக்காக அப்படிச் செய்தார்கள்? நமக்காக அல்ல.

*

இந்தியா முழுவதையும் ஒரே ஆட்சியின்கீழ் வைத்து இவ்வளவு காலம் பிரிட்டிஷாரால் ஆள முடிந்ததற்குக் காரணம் அவர்களது ஆயுத பலமும், பிரித்தாளும் தந்திர புத்தியுமேயாகும்.

*

இந்தியாவில் ஒரு இனத்தையும் அதற்குரிய தாயகத்தையும் எதைக்கொண்டு நிர்ணயிப்பது? இது முக்கிய விஷயமே. ஒரே மொழி, ஒரே கலாசாரம், ஆகியவைகளை உடையோரைத் தனி இனமாகவும், அவர்கள் சேர்ந்தாற்போல்வாழும் பிரதேசத்தை அவர்களுக்குரிய தாயகமாகவும் கொள்வதே சரியான முறை. இதன்படிப் பார்த்தால், இந்தியாவில், தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், கூர்ஜரர், வங்காளத்தார், பாஞ்சாலத்தார், மராட்டியர் போன்ற பதினேழு தேசிய இனங்களும் அவற்றின் தாயகங்களும் இருக்கின்றன.

இந்தப் பதினேழு நாடுகளும் தத்தம் எல்லையில் வேறு எவர் தயவுமின்றி, தனிஅரசு புரியக் கூடிய அளவுக்கு, மக்கள் தொகை, பொருள்வளம், நில வளம் ஆகியவைகளைப் பெற்றிருக்கின்றன.

*

கடந்த 20 ஆண்டுகளாக, மொழிப் பற்று இனப் பற்றுகளுக்குப் புறம்பாகத் தமிழ் நாட்டில் தேசீயம் வளர்ந்து வந்தது. அதே வழக்கம்தான் இன்றும் நீடித்து வருகிறது. ஆனல் இனியும் நீடிக்கக்கூடாது; நீடிக்க விடவும் முடியாது.

*

ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரத்தைப் பெறப் போராடிய காங்கிரஸ்வாதிகள், பெற்ற சுதந்திரத்தைப் பிற இனத்தவரிடமிருந்து பிரித்து வாங்குவதற்குப் பின் வாங்குவது தமிழினத்துக்கு நன்மை செய்வதல்ல.

*

ஏகாதிபத்யச் சுரண்டலிலிருந்து இந்தியா விடுபடுவது போல் வடநாட்டாரின் சுரண்டலிலிருந்தும் தமிழ்நாடு விடுதலை பெற வேண்டும் என்பதே தமிழரின் பொருளாதாரக்கொள்கை.

வர்த்தகத் துறையில் ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற உரிமைகள் அனைத்தும் பம்பாய்த் துறைமுகத்தோடு நின்றுவிட்டன.

* * *

தம்பி! திராவிடத்திலே, 'திராவிடம்' என்பதை கற்பனை என்று கூறி வருவோரே, இந்த அளவுக்குக் கூறிட நேரிட்டது. நாம், இந்தக் கருத்துகளுக்கு, வரலாற்றுச் சான்றுகளையும், இலக்கிய ஆதாரங்களையும் எடுத்தியம்புகிறோம். வெள்ளை ஏகாதிபத்தியத்தின் துணைகொண்டு துரைத்தனம் நடத்தத் தொடங்கிய வடநாட்டு ஏகாதிபத்தியம், நம் நாட்டினைத் தமது வேட்டைக்காடு ஆக்கிக் கொண்டதற்குப் புள்ளி விவரம் காட்டுகிறோம்; அவ்வப்போது காங்கிரஸ் தலைவர்களே கூட மனம் புழுங்கிய நிலையில், வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதுபற்றிக் குமுறுவதை எடுத்துக்காட்டுகிறோம், ஐந்தாண்டு திட்டம் ஒரு ஓரவஞ்சனைத் திட்டம் என்பதற்குக் காங்கிரஸ் ஏடுகளே தரும் கருத்துகளை எடுத்து மக்களிடம் வழங்குகிறோம் — இவ்வளவையும் காமராஜர், தமது மின்னல் வேக மேதாவிலாசத்தின் துணைகொண்டு, ஒரே நாளில், 15 கூட்டங்கள் நடத்தி, ஒழித்துவிடுகிறார். இஃதன்றோ ஆற்றல்! இவரன்றோ முதலமைச்சர்!

மக்கள், என்ன எண்ணுகிறார்கள்?

திராவிட நாடு தனி-நாடு ஆக வேண்டும் என்பதற்கும், வடநாட்டு ஆதிக்கம் நம்மை வாட்டி வதைக்கிறது என்பதற்கும், பணக்காரர் கொட்டம் வளர்ந்து வருகிறது, பாமரர் பராரியாகிக்கொண்டு வருகிறார்கள் என்பதற்கும் காமராஜர் **"அதெல்லாம் இல்லை! அதெல்லாம் தப்பு!"** என்பதன்றி, வேறு தக்க சமாதானமோ, காரணம் காட்டி மறுப்போ கூறக்காணுமே—என்று மக்கள் எண்ணிக்கொள்ளமாட்டார்களா? என்று நீ கேட்பது தெரிகிறது, தம்பி! மக்கள், அப்படித்தான் எண்ணிக்கொள்வார்கள்; எண்ணிக்கொள்கிறார்கள். ஆனல் காமராஜரின் மின்னல்வேக மேதாவிலாசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், மனம் குமுறும் நிலையில் உள்ள மக்களல்ல, வறுமையால் கொட்டப்படும் ஏழைகளல்ல; பழையகோட்டை பட்டக்காரரும், பழனிச்சாமி கவுண்டரும் சேனாபதியும், மகாலிங்கமும் கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் அகம்பாவத்தின் விலை அறிவார்களேயன்றி, ஆழாக்குக்கும் உழக்குக்குமா அலைந்து திரிபவர்கள்! அவர்கள், முதலமைச்சரைக் கண்டனர்; தம்மை அவர் களிப்புடன் கண்டார் என்று அறிந்து மகிழ்ந்தனர்; வேறென்றும் அறியார், பாபம்! நாட்டிலே கொதித்தெழும் நிலைமையினைப்பற்றி அவர்கட்கு என்ன கவலை? முன்பு அவர்கள் காங்கிரஸ் எதிரிகள், இப்போது நண்பர்கள்! முன்பு, காமராஜர் அவர்களைக் 'கடுவிஷம்' என்றார், இப்போது சுவைக்கிறார்; அவர்கள் இந்த 'உயர்வு' கண்டு உளம் பூரித்துக் கிடக்கும்போது, ஒரு நாளில் பதினைந்து என்ன, நாற்பத்தைந்து கூட்டங்களில்கூடக் காமராஜர் தமது மேதா விலாசத்தைக் காட்டலாமே!

ஒரே நாளில் பதினைந்து இடங்களிலே, முதலமைச்சர், மின்னல் வேகத்தில் தம் மேதா விலாசத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்; **இலங்கைத் தீவில் ஒரே நாளில் 25 பிணங்களைக் கண்டெடுத்தனர்! தமிழரின் பிணங்களடா தம்பி, தமிழரின் பிணங்கள்.** யார் பெற்ற மக்களோ, எத்தனை மக்களைத் தவிக்கவிட்டுச் சென்றனரோ? வெட்டப்பட்டனரோ, குத்தப்பட்டனரோ, வெந்தழலில் தள்ளப்பட்டனரோ, வெறியரின் தாக்குதலுக்குப் பலியாகி, உயிர் இழந்த உத்தமர்களின் பிணங்கள் சிங்களத் தீவினிலே தலைவிரித்தாடும் செருக்குக்கு இரையான

செந்தமிழ்த் தோழர்தம் உடலங்கள், அழுகிக்கிடக்கின்றன, கண்டெடுத்தவை இருபத்து ஐந்து, கணக்குக்கு வாராதவை எத்துணையோ! கண்ணீர் சிந்தி என்ன பயன், காட்டாட்சி நடக்கிறது அங்கே, இங்கே மின்னல் வேகத்தில் மேதாவிலாசத்தைக் காட்டுகிறார் தமிழர் — பச்சைத் தமிழர்!

**சுட்டுத் தள்ளுகிறார்கள்**

**வெட்டிக் கொல்லுகிறார்கள்**

**துரத்தித் தாக்குகிறார்கள்**

**கொள்ளை அடிக்கிறார்கள்**

**பெண்களையும் மானபங்கம் செய்வதாகக் கூறப்படுகிறது.**

இலங்கையில், அடக்குமுறை அவிழ்த்துவிடப் பட்டிருக்கிறது; அவதி, காட்டுத்தீயெனக் கிளம்பிவிட்டிருக்கிறது; ஆயிரம் **'கோவா'** நடக்கிறது அங்கு! கடலுக்கு அப்பால், எமது தாயகம் இருக்கிறது, காமராஜா என்றோர் தமிழர் கோலோச்சுகிறார், இந்தப் பேயகத்துச் செயலைக் கேட்டு அவர், சீறி எழுவார், சிங்கள வெறியைக் கண்டிப்பார், என்றெல்லாம், அங்கே தமிழர்கள், அந்தோ பரிதாபம், எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், இங்கே மின்னல் வேக மேதா விலாசம் நடாத்தி கன தனவான்களிடம், கன்னல் மொழி பேசிக் காலந் தள்ளுகிறார், காமராஜர், கனம்!

**திருமாவளவன்** சிங்களம் வென்றான் அங்குபிடிபட்டவரைஈண்டுகொணர்ந்து காவிரிக்குக் கரை கட்டினான் என்கின்றனர், புலவர் பெருமக்கள்! அதோ, சிங்களத் தீவிலே, செந்நீர் ஆறாக ஓடுகிறது, கண்ணீர் பொழிகின்றனர், காவிரியைத் தமது என்று உரிமை கொண்டாடும் தமிழ் இனத்தவர்.

கோவா கொடுமையைக் கண்டிக்க, 'நா' இருந்தது; தமிழன் தாக்கப்படுகிறான், வாயடைத்துக் கிடக்கின்றனர்.

வகையற்றோர் ஆள்கின்றனர், வேற்றுச்சீமையிலே நம்மவர் மாள்கின்றனர்! கொன்று குவிக்கப்படுகிறார்கள், நம் குலத்தவர், கோலோச்சும் கோமான், முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக்கட்ட 'பழையகோட்டை'களை நாடுகிறார்—பதவி மகுடி ஊதுகிறார்!

**"கதறுகின்றாள் தமிழ் அன்னை, அந்தக் கூக்குரல் உலகெங்கும் உள்ள தமிழர்களின் காதைத் துளைக்கிறது. அவர்கள் உள்ளம் துடிக்கிறது. ஆனால் அவர்கள் என்னசெய்ய முடியும்? சென்னை இராஜ்ய முதல் மந்திரி தமிழர் காமராஜ் உள்ள திசையை அவர்கள் நோக்குகிறார்கள். தமிழ் அன்னையின் கதறல் அவர் காதில் விழவில்லையே"** — என்று பதறிக் கேட்கிறது, **'சுதந்திரம்'** எப்படி ஐயா, விழும், எப்படி விழும்!

"இந்த வழியாகத்தானே பிணம் வரும்; வரட்டும், நான், கலந்து கொள்கிறேன்" என்று கூறவில்லையா, இரத்தக் கண்ணீரில் — குட்டம் பிடித்துப் பிறகு அலையும் மோகன்!

நான் ஆள் பிடிக்கும் வேலையில் அலைந்து திரிகிறேன். தி. மு. க. வைத் தீர்த்துக்கட்டக் கங்கணம் கட்டிக்கொண்டு, வேலையில் இறங்கிவிட்டேன், ஆச்சாரியார் கைவலுக்கிறதா, என் கரம் வலுக்கிறதா என்று பார்த்துவிட நான் "கோதா'!வில் இறங்கிவிட்டேன், இந்த நேரத்தில், இலங்கையாம், இருபத்து ஐந்து தமிழ் பிணங்களாம், செச்சே! சமயமறியாமல் தொல்லை தருகிறார்களே, சமூகத் துரோகிகள்!—என்றுகூட அவர் சலித்துக்கொள்ளக் கூடும்! நீண்ட நாட்களுக்குப் பிறகு, அவர் துணிந்து தம்மேதாவிலாசத்தைக் காட்ட மின்னல் வேகத்தில் புறப்பட்டிருக்கிறார்! ஒரே நாளில் 15!! இருபத்து ஐந்து பிணங்களாம்!! தமிழர் பிணங்களாம்!! அங்குதான் எத்தனை எத்தனையோ இலட்சம் தமிழர்கள் இருக்கிறார்களாமே, ஒரு இருபத்து ஐந்து பேர் பிணமாகிவிட்டால் என்ன, குடியா முழுகிவிடும்—ஒரு முதலமைச்சர்—தமிழர்—பச்சைத் தமிழர்—தம் மேதாவிலாசத்தை மின்னல் வேகத்தில் காட்டிக்கொண்டிருக்கும் போது, கதறி, பதறி, இலங்கையில் தமிழர் இம்சிக்கப்படுகிறார்கள் என்கிறீர்களே, எவ்வளவு கேவலமான, கேடுகெட்ட, தேசத்துரோக, புத்தி ஐயா, உங்களுக்கெல்லாம், என்று கேட்க, காமராஜரிடம் சீடர்கள் இருக்கிறார்கள். தம்பி, இருக்கிறார்கள்! மின்னல் வேக மேதா விலாசத்தை இரசிக்கிறார்கள்—பலனும் பெறுகிறார்கள்.

அன்பன்,

**அண்ணாதுரை.**

4-ம் பக்கத் தொடர்ச்சி

வொரு மந்திரியும் தத்தமது விருப்பப்படி திட்டமும் ஏற்பாடுகளும் செய்துகொண்டு,' அதற்குப் பணம் வேண்டும், இதற்குத் தேவைப்படுகிறது' என்று நச்சரித்துக் கொண்டே இருப்பார்களாம். அதோடு, ஒவ்வொரு மாகாணத்தையும் தலையில் குட்டும் தைரியமும் வேண்டுமாம். இவைகளையெல்லாம்விட, நேரு விரும்புகிற படி ஆடுகிற பழக்கமும் தேவைப்படுகிறதாம். அவர் விருப்பப்படி செய்துவிட்டு, அதனால் ஏதாவது பழிகள் ஏற்பட்டால், தாங்கிக் கொள்ளும் தன்மையும் இருக்க வேண்டுமாம். தேசமுக், முன்பு இந்தியாவின் ரிசர்வ் பாங்கி கவர்னராக இருந்துவிட்டு இங்கிலாந்தில் போயிருந்தபோதுதான் அவரை வருந்தி அழைத்து இங்கே கொண்டுவந்தார்களாம். அவருக்கு முன்பு இருந்த நிதியமைச்சர் விலகியதும், நேரு கலங்கிப்போய், அப்போது பாதுகாப்பு மந்திரியாக இருந்த கோபாலசாமி அய்யங்காரிடம் 'என்ன செய்வது?' என்று கேட்க, அவர் மறுத்துவிட்டு, தேசமுக்கைப் பற்றிச் சிபாரிசு செய்தாராம். பிறகுதான் தேசமுக் வந்தார். வெள்ளையன் காலத்தில் பெரிய அதிகாரியாக இருந்தவர் என்பதால் இவரால், திறமையாகச் சமாளிக்க முடிந்ததாம். இப்போது, 'இவரும் போகிறேன்' என்று சொல்வது நேருவுக்குப் பெரிய தலைவலியாக இருக்கிறதாம் — "இவ்வளவு சங்கடம் எதற்கு? சும்மாதானே இருக்கிறார் அவர்; கூப்பிட்டு அவரை நிதி மந்திரியாக்கிவிடலாமே..." என்று ஒருவர், நமது ஆச்சாரியாரைப் பற்றிச்சொல்லிக்கொண்டிருந்தார். இன்னொருவர், "போதுமப்பா போதும்; அவரை மீண்டும் அழைப்பது பிள்ளைப் பூச்சியை எடுத்து வயிற்றில் கட்டிக்கொள்வதுபோலத்தான்" என்றார். "இங்கேயும் உமக்கு இந்தப் பெயர்தானா!" என்று வருத்தப்பட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

காங்கிரசு தலைமை அலுவலகத்தில் கவலையே உருவாய் உட்கார்ந்து கிடந்தார், காங்கிரசுத் தலைவர் தேபர். அவருக்குப் பக்கத்தில் இரண்டுபேர் உட்கார்ந்துகொண்டு "முடியாது, இந்தாருங்கள்........." என்று எதையோ கொடுத்தார்

கள். அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தவண்ணம், 'வேண்டாம், வேண்டாம், அப்படியெல்லாம் செய்யாதீர்கள்...'' என்று கெஞ்சிக்கொண்டிருந்தார் தேபர். என்ன கதையென்று பார்த்தேன். ஒருவர் பம்பாய் சட்டசபைத் தலைவர் குண்டே என்பவர், இன்னொருவர் பம்பாய் ரெவினியு மந்திரி கிரே என்பவர், அவர்களிருவரும், மராட்டியத்துடன் பம்பாயை இணைக்கவில்லையென்பதற்காகத் தத்தமது பதவிகளை விட்டு விலகும் கடிதங்களைத் தேபரிடம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவரோ "நீங்களெல்லாம் இப்படிச் செய்தால் பிறகு காங்கிரசின் கதி என்னுவது?'' என்றார். ''காங்கிரசின் கதி, பிறகிருக்கட்டும் ஐயா, முதலில் எங்கள் கதி என்னுகும் என்பதை நாங்கள் பார்த்துக்கொள்ளவேண்டாமா? நான் மராட்டிய காங்கிரஸ் கமிட்டித் தலைவன். எங்களுடைய காங்கிரஸ் கமிட்டியே, பம்பாய் மராட்டியத்துடன் சேர்க்க வேண்டும் என்று உங்களைக் கேட்டது. நேரு தான் சொன்னதே வேதவாக்கு என்று பிடிவாதம் பிடிக்கிறார். ஊர்ப்பக்கம் போனால், எங்களைக் காரித் துப்புகிறார்கள், மக்கள். எல்லாரும் என்ன மான ஈனம் அற்றவர்களா, நேருவுக்கு 'சலாம்'போடத்தானு இவர்கள் — என்றெல்லாம், பேசுகிறார்கள். இந்த நிலையில் பதவிதான் பெரிது என்று நாங்களிருந்தால் எங்கள் அரசியல் வாழ்வைப் பாடைகட்டி கொளுத்திவிடுவார்கள், மராட்டியர்கள். அதை நாங்கள் விரும்பவில்லை. மராட்டியத்தின்மீது எங்களுக்கும் பற்றுதல் இருக்கிறதென்பதைக் காட்டிக்கொள்ள ஏதாவது செய்துதான் ஆகவேண்டும். இல்லையென்றால், ஒரு மேடைகூடப் போட்டுப் பேசமுடியாது எங்களால்'' என்றார், அவர்களோடு இருந்த இன்னொருவர். அவர்தான், மராட்டிய காங்கிரஸ் தலைவர் தேவ்கிர் என்பவராம். தேபர், திகைத்தார், விழித்தார்!

எனக்கு, நம்ம ஊர் காமராசரும் மந்திரிமார்களும் கவனத்துக்கு வந்தார்கள். டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தேன். காமராசரைப் பார்த்தேன், 'பார்த்தீரா, மராட்டியத்தை,' என்றேன். என் பார்வையின் பொருளைப் புரிந்துகொண்ட அவர், 'ஆகட்டும், பார்க்கலாம்,'' என்றார். 'தேவியாவது, குளமாவது, பீராவது, மேடாவது'— என்றீரே, நேரு சொல்லிவிட்டால் சொன்னதுதான் எனக்கூறினீரே, பார்த்தீரா மராட்டியத்தை' என்றேன், கொஞ்சம் அழுத்தத்துடன். "கூலா, ஏதாவது கொண்டுவரச் சொல்லட்டுமா? ஐசு கிரீம் சாப்பிடுகிறீங்களா...'' என்று அவருக்கே அமைந்த பாணியில் கேட்கலானார். எனக்குப் பற்றிக்கொண்டு வந்தது ஆத்திரம்.'ஏனய்யா, தங்களுடைய கோரிக்கையை நேருவின் தர்பார் ஒப்புக்கொள்ளவில்லை யென்றதும், வீசியெறிகின்றனர், மராட்டியர் பதவிகளை. நீங்களோ......, என்றேன். 'குற்றாலத்தில் போய்க் குளித்தால் எப்படியிருக்கிறது தெரியுமா? அங்கு போகவேண்டும்; ஆனால் இந்த ஆச்சாரியார்......, என்று, மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போலப் பேச ஆரம்பித்தார். கனிவு வழிந்தது பேச்சில். அவர் குற்றாலம் என்றதும், எனக்குக் கவனம் வந்தது.

'ஆமாம், குற்றாலத்தில்தானே கடந்த ஆண்டு தமிழ் நாடு காங்கிரசு கமிட்டியினர் கூடினார்கள்?'

'ஆமாம்...'

'டில்லி மந்திரி டி, டி. கிருஷ்ணமாச்சாரி கூட வந்திருந்தாரல்லவா?'

'ஆமாம்,'

'அங்குதானே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் டில்லி சர்க்கார் சென்னையைப் புறக்கணித்து நடந்து கொண்டிருக்கிறது. அப்படியில்லாமல், இன்னும் அதிகப் பணம் ஒதுக்கித்தர வேண்டும், என்று தீர்மானம் போட்டீர்கள்...'

'ஆமாம், உங்களுக்குத் திருப்திதானே?'

'என் திருப்தி கிடக்கட்டுமய்யா! அந்தத் தீர்மானத்துச்கு டில்லி என்ன மதிப்பு அளித்தது?'

'அதா......!' என்று இழுத்துவிட்டு 'கோல்ட் பிளேக்' சிகிரெட். பிடிக்கிறீர்களா? இதோ'' என்று நீட்டினார்.

'கேள்விக்குப் பதில் முதலில்; பிறகு இருக்கட்டும் அன்புபசாரம், உங்கள் தமிழ் நாட்டுக் காங்கிரசின் தீர்மானத்தை மதிக்கவில்லை. டில்லி. பிறகு, சட்டசபையிலேயும் தீர்மானம் செய்துகொண்டு போனீர்கள், டில்லிக்கு. தூக்கியெறிந்தார்கள் முகத்தில். இல்லையா?'

பதில் கூறவில்லை, அவர். முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

'பம்பாயைக் கொடுக்கமுடியாது, என்று பிடிவாதம் செய்கிற ஒரே காரியத்துக்காக தேசுமுக் விலகுகிறார் — மராட்டிய காங்கிரஸ் கமிட்டி கண்டிக்கிறது—மராட்டிய மந்திரிகள் பதவிகளை விட்டு விலகி, டில்லியார் ரபரப்படையச் செய்கிறார்கள். இங்கோ, 'சென்னை'யைத் 'தமிழ்நாடு'என மாற்ற வழியில்லை. தேவிகுளம் பீர்மேடு நமக்கில்லை. அதோடுதானு என்றால், ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று உங்கள் காங்கிரஸ் கமிட்டி போட்ட தீர்மானத்துக்கு மதிப்பில்லை. ஆனாலும், அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள் மந்திரிப் பதவியே பெரிதென்று, இல்லையா?' —என்று கோபத்தோடு கேட்டேன்; அவரோ, அருகேயிருந்த 'விடுதலை'யை எடுத்து, படிப்பதுபோல முகத்தை மூடிக் கொண்டார்!

★

---

## திருமணம்

17—6—56 காலை தாம்பரம் செ. இராசகோபாலன்—விஜெயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் வ. அ. எதிராசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது, புதுமைத் திருமணம் குறித்து கவிஞர் பாரதிதாசன், இராம. அரங்கண்ணல், எம். ஆதி, எம். செல்லப்பன் ஆகியோர் பேசினர்,

# ரங்கூன் வைரம்

அசல் சரக்கு போதிய அளவில் கிடைக்கா விட்டாலும், விலை அதிகமாக இருந்தாலும் போலி சரக்குகள் உற்பத்தியாவது இயற்கை தான். அவ்விதச் சரக்குகளில் 'போலிவைர'மும் ஒன்று. இதை 'இமிடேஷன் வைரம்' என்றும் 'கண்ணாடி வைரம்' என்றும், 'ரங்கோன் வைரம்' என்றும் வேறு பெயர்களால் கூறுவார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டில் கூழாங் கல்லைப் போன்ற ஒரு வகைக் கண்ணாடிக் கற்கள் கிடைக்கின்றன. இந்தக் கல்லைத் தான் பட்டை தீட்டி 'போலி வைர'மாக பளபளக்கச் செய்கிறார்கள்.

பட்டை தீட்டும் தொழிலில் முன்னணியில் நிற்கும் நகரங்கள் இந்தியாவில் இரண்டே இரண்டுதான்! ஒன்று வடநாட்டில் உள்ள ஜபல்பூர், மற்றொன்று திருச்சி.

திருச்சி நகரில் மட்டும் பட்டை தீட்டும் தொழிலில் சுமார் 12-ஆயிரம் பேர் ஈடுபட்டு இருக்கிறார்கள். திருச்சி நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பட்டை தீட்டுகிறார்கள்.

பட்டை தீட்டப்பட்ட வைரத்தை விற்கும் கடைகள் திருச்சியில் மட்டும் 100க்குமேல் இருக்கின்றன. இத்தொழிலில் சுமார் 16 இலட்ச ரூபாய் முதலீடு செய்யப்பட்டு இருக்கிறது. ஆண்டு தோறும் சுமார் 25 இலட்ச ரூபாய் பெறுமானம் உள்ள வைரக் கற்கள் விற்கப்படுகின்றன.

பட்டை தீட்டும் தொழில் முழுக்க முழுக்க குடிசைத் தொழிலாகவே நடைபெறுகிறது. இதற்குப் பெரிய பெரிய யந்திரங்களும் தொழிற்சாலைகளும் தேவையில்லை. ஒரு குடிசை போதும் ஒரு சாணை தீட்டும் கல் போதும்.

சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து சாக்குக் கட்டிபோல், நீண்ட உருண்டை வடிவில் கண்ணாடிக் கற்கள் இந்தியாவுக்கு இறக்குமதியாகின்றன. ஜபல்பூரிலிருந்து அந்தக் கற்கள் திருச்சிக்கு வருகின்றன.

சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து வரும் கண்ணாடிக் கற்களை 'மணி' என்பார்கள். ஒரு தோலா சுமார் ஒன்றரை ரூபாய் வீதம் 'மணி' விற்கப்படுகிறது.

பட்டை தீட்டும் தொழில் செய்கிறவர்கள் 'மணி'யை வாங்குவார்கள். அந்த 'மணி'யையும், பட்டை தீட்டப்பட்ட வைரத்தையும் ஒன்றாக வைத்து பார்த்தவர்கள் நம்பமாட்டார்கள். இதிலிருந்தா இப்படி பளபளக்கும் வைரம் செய்கிறார்கள்? என்று அசந்து போவார்கள்!

வைரக்கல்லுக்கு வேண்டியபடி 'மணி' சிறிதும் பெரிதுமாக துண்டு துண்டாகத் தேவையான அளவில் நறுக்கப்படுகிறது.

இப்படி நறுக்குவதற்கு சில யந்திரசாலைகள் இருக்கின்றன. வெட்டுவதற்கு தோலா ஒன்றுக்கு ஆறு அணா முதல் எட்டு அணாவரை கூலி கொடுக்கப்படுகிறது.

துண்டு துண்டாக வெட்டப்பட்ட 'மணி'யை 'தளம்' என்பார்கள். சில வியாபாரிகளே 'மணி'யை 'தள'மாகவெட்டி விற்பார்கள்.

'தளம்'தான் வைரமாகப் பட்டை தீட்டப்படுகிறது, பட்டை தீட்டுவதில் மூன்று முக்கியக் கட்டங்கள் இருக்கின்றன.

உண்மையான வைரத்துக்கும் கண்ணாடி வைரத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் மிக நுணுக்கமாக நாசூக்காக மூன்று கட்டத்திலும் வேலை செய்யப்படுகிறது.

இது முடிந்த பிறகு வைரம் குடிசையை விட்டு வெளியேறுகிறது. இனி இருக்க வேண்டிய இடம் அது அல்லவே, பெண்களின் உடம்புகளிலே அலங்காரமாக பெருமையோடு அமர்ந்து இருப்பதற்காகப் புறப்படுகிறது.

இந்தியாவின் பல பாகங்களுக்கும், மலாயா, ரங்கூன், இலங்கை முதலிய வெளி நாடுகளுக்கும் பட்டை தீட்டப்பட்ட போலி வைரங்களை திருச்சி வியாபாரிகள் ஏற்றுமதி செய்கிறார்கள்.

அசல் வைரத்தின் குணங்கள் போலி வைரத்தில் இல்லை. ஆனாலும் பளபளப்பு இருக்கிறது, மினுமினுப்பு இருக்கிறது.

அசல் வைரத்தின் விலை ஏராளம். ஏழைகளால் எட்ட முடியாதது. போலி வைரத்தின் விலை மிகக் குறைவு.

சிறு வைரக் கற்கள் 'காரட்' ஒன்று 10 அணா முதல் ஒரு ரூபாய் வரையும், பெரிய கற்கள் 'காரட்' ஒன்று 8 அணா முதல் 12 அணா வரையும் விற்கப்படுகிறது. பட்டை தீட்டப்பட்ட அசல் வைரத்தின் குறைந்த விலை 'காரட்' ஒன்று 400 ரூபாய். மலை எங்கே? மடு எங்கே?

ஏழை எளியவர்களின் ஆசையைப் போலி வைரங்களே நிறைவேற்றி வருகின்றன போலி வைரங்களுக்குக் கிராக்கி நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. அதற்குத் தக்கபடி பட்டை தீட்டும் தொழிலும் பெருகவேண்டும்.

பட்டை தீட்டும் தொழில் ஒரு குடிசைத் தொழில். கால் ஊனம் ஆனவர்கள் இத்தொழிலால் கவலை இல்லாமல் வாழலாம். இத்தகைய பெரிய தொழிலுக்கு ஆதரவு அளித்து வளர்க்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

★

“அவன் ஒரு சர்க்கார் குமாஸ்தா! இப்போது இங்கிருக்கும் என். ஜி. ஓ.க்கள் எப்படித் திண்டாடித் தேம்புகிருர்களோ, இதேபோல அப்போது ரஷ்யாவிலிருந்த குமாஸ்தாக்களிருந்தனர். ‘முதல் தேதி நோக்கி’ய வண்ணமிருப்பது, அன்று கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டுபோய் வீட்டில் கொடுப்பது, பால்காரன், அரிசிக் கடைக்காரன், அங்காடிகள் அது இது என்று போன மாதத்தில் வாங்கிய கடனைத் தீர்த்துவிட்டு, மாதத்தின் மற்றைய நாட்களைக் கழிக்க மீண்டும் கடனுக்கு அலைவது! எப்படியாவது ஒரு புதுச் சட்டை வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும என்பதுதான், அவனுடைய ஆசை!!

அவனுக்கு இருந்ததெல்லாம் ஒரே ஒரு சட்டை தான்-அதுவும் எப்போதோ தைத்தது, இங்கிக் கரையும், பூச்சிகளின் வெட்டும், அடித்துத் துவைத்ததால் நைந்தும், வீசியெறியவேண்டிய நிலையிலே அது இருந்தது. அதை வீசியெறிந்து விட்டால், ஆபீசுக்கு எப்படிப் போக முடியும்? அதனுல், அந்த மேலங்கியை விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருந்தான். அவனைப்பார்ப்போரும், அவனுடைய மேலதிகாரிகளும் செய்யும் கிண்டல்கள் அவன் காதில் விழத்தான் செய்தன. எத்தனை நாளைக்குத் தாங்கிக் கொள்ள இயலும்? அதனுல், எப்படியாவது ஒரு புதிய மேலங்கியை வாங்கிவிட வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டது அவனுக்கு. நினைத்ததும் தைக்குமளவுக்கு அவன் என்ன மிட்டாவா, மிராசுவா? ஏழைக் குமாஸ்தாவாயிற்றே! ஆபிசு விட்டதும், உழைப்பின் களைப்பை நீக்கிக்கொள்வதற்காக, மாலையில் அருந்தும் பானங்களை நிறுத்திக்கொள்கிருன். இரவில் தன் அறையில் விளக்கு ஏற்றுவதில்லை! எண்ணெய்க்குச் செலவாகும் காசு மிச்சப்படுமல்லவா? பழைய செருப்பு எங்கே தேய்ந்து போய்விடுமோ என்று மெதுவாக நடக்கிருன்! இப்படியெல்லாம் சிக்கனமாயிருந்து, கடைசியில் ஒரு புது மேலங்கியை வாங்குகிருன். ஆனந்தத்துக்கு அளவில்லை! அந்த மேலங்கியைப் போட்டுப் போட்டுப் பார்க்கிருன். தன் வாழ்க்கையில் பெரியதொரு வெற்றியைச் சாதித்துவிட்டதாக ஆனந்தப் பரவசம் பெறுகிருன். ஆபீசுக்குப் போகிருன். அந்தோ, பரிதாபம்! அன்று இரவே, அவனைவிட கேடுகெட்ட நிலையிலே இருக்கும் ஏழைகள், அவனுடைய புது மேலங்கியைத் திருடிக்கொண்டு போய்விடுகிருர்கள்! எப்படி இருக்கும் அவனுக்கு? தேடித்தேடி அலைகிருன், திருடர்களை. ஓடி ஓடி விசாரிக்கிருன். கேலிப் பேச்சுக்கும் கிண்டலுக்கும் ஆளானதுதான் மிச்சம். அவனுடைய ஆபீசர் ஒருவன், அவனை மனதொடிகிற அளவுக்குக் கிண்டல் செய்கிருன். இப்படி மிதமிஞ்சிய சோகம் அவனைத் துளைக்கவே குளிர்க் காய்ச்சல் கண்டு இறந்துவிடுகிருன். அவனுடைய ‘ஆவி’ அவனைக் கேலி செய்து கொடுமைப் படுத்திய அந்த ஆபீசரின் மேலங்கியையே அபகரித்துக் கொள்கிறது! ஏழையாயிருந்தபோது தன்னைக் கேலி செய்ததற்கு, பழி வாங்கிக்கொள்கிருன் அந்தக் குமாஸ்தா!!”

‘ஜார்’ காலத்து ரஷ்யாவில், அறிவிருந்தும் வாழ வழியற்று வாழ்க்கையில் இன்பம் காணுமல் மடியும் அத்தனை கோடி மக்களின் கண்ணீரையும் காட்டிற்று, இந்தச் சிறுகதை. படித்தோரெல்லாம், கண்ணீர் பொழிவர்! அவ்வளவு ‘தத்ரூபமாக’ இந்தக் கதையைத் தீட்டிய இவன் ஒரு குமாஸ்தாவாக இருந்தவன்தான்!! ரஷ்யாவில், முதல் வசனகர்த்தா என்னும் புகழுக்குரியவனை இவன்தான் நிகோலாய் கொகேல் எனும் ஆசிரியன். இவன் தீட்டிய நாடகங்கள், ஏழைகளின் கஷ்டங்களையும், ஆளவந்தாரின் சீர்கெட்ட போக்குகளையும் எடுத்துச் சொல்லின. ரஷ்யாவில் புரட்சி பூக்க, தலைவர்கள் மட்டுமல்ல, இவரைப் போன்ற எழுத்து மேதைகளின் தொண்டும் மிகமிகப்பயன்பட்டது.

இவன் தீட்டிய “இன்ஸ்பெக்டர் ஜெனரல்” எனும் நாடகம் அக்காலத்து ஆளவந்தாரின் நிலைமையைச் சித்தரித்தது. ஒரு மாகாண கவர்னருக்கு ஒரு செய்தி வருகிறது. ‘இன்ஸ்பெக்டர் ஜெனரல்’ வரப்போவதாக! இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்பவன் ஜார் மன்னனுல், ஒவ்வொரு இடத்துக்கும் அனுப்பப்படும் அதிகாரி. அவன் வந்து எங்கே தங்கள் ஊழல்களைக் கண்டுபிடித்து விடுவானே என்றஞ்சிய கவர்னர், மிகவும் ஜாக்கிரதையான ஏற்பாடுகளை செய்கிருன். தங்களுடைய ஊழல்களைக் கண்டுபிடிக்க அவன் இரகசிய உடையில் வந்திருக்கக்கூடும் என்று கருதி ஊரெல்லாம் வலை வீசுகிருன்! அப்போது ஒரு சத்திரத்தில் அழுக்கடைந்த உடைகளுடன், ஒரு வாலிபன் தூங்குகிருன். அவன்தான் உளவறிய வந்த அதிகாரியென்று யாரோ ‘கயிறு’ கட்டி விடுகிருர்கள். அடிக்கிறது யோகம் அவனுக்கு! கவர்னரே வந்து அவனை ராஜோபசாரங்களுடன் அரண்மனைக்கு அழைத்துப் போகிருன். உண்மையில் அந்த வாலிபன் யாரென்ருல், சூதாட்டத்தில் பணத்தைத் தோற்றுவிட்டு சத்திரத்தில் படுக்கவந்த ஒரு ஊதாரி. முதலில் அவன் மிரள்கிருன்! கவர்னரின் போக்கிலிருந்து விஷயம் புரிந்துகொண்டதும், நான்தான் உண்மையான ஜெனரலென்று அவர்களை ஏமாற்றுகிருன்! அவனைச் சரிக்கட்டுவதற்காக, ஒவ்வொருவரும் ஏராளமான காணிக்கைகளைச் செலுத்துகின்றனர். வாலிபன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிருன்! கவர்னர், தன் மகளைக் கலியாணம் செய்துகொள்ளும்படி கோருகிருன். அதற்கும், அந்த எத்தன் சம்மதமளிக்கவே கவர்னர் அளவிலாத ஆனந்தமடைகிருன். தன் வீட்டாரின் அனுமதியுடன் வருவதாகச் சொல்லிவிட்டு, கிடைத்த வெகுமதிகளை அள்ளிக்கொண்டு அந்த வாலிபன் சென்ற பிற்பாடு, உண்மையான ‘கவர்னல் ஜனரல்’ வந்திருப்பதாகச் செய்தி வருகிறது!!

இதைக் காணும்போது, எப்படியிருக்கும் மக்களுக்கு? ஆயிரம் பீரங்கிகள் கொண்டு சாதிக்க வேண்டியதை இந்த ஒரே நாடகம் சாதித்து விடாதா! அதனுல்தான் கிண்டலும் கேலியும் கலந்த தாக்குதலுக்கு ‘ஆதிக்கவாதிகள்’ அஞ்சி, “நாடகமா? கூடாது!”, “திரையா? தூ! தூ!!”, என்று அலறுகிருர்கள். கொகேல், காட்டிய பாதை பல எழுத்தாளர்களை ரஷ்யாவில் சிருஷ்டித்தது! அப்படிப்பட்டவர்கள் திராவிடத்திலும் வளரவேண்டும்!!